பக்கங்கள்: 14 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 08 செவ்வாய்க்கிழமை 22.06.2021 கதிர் 229

### இது ரகசியம் அல்ல!

சட்டம் எத்தகைய இரும்புச் சட்டமாக இருந்தாலும் அதில் ஓட்டையைத் தேடிக் கண்டுபிடித்து அதில் நுழைவதுதான் சட்ட விற்பன்னர்களின் திறமை.

மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ, இப்போது நாடாளு

பக்கம்02 »

இந்திய – இலங்கை வெளிவிவகார அமைச்சர்கள்

## ஜெய்சங்கர் - தினேஷ் குணவர்த்தன திடீரென தொலைபேசியில் பேச்சு!

புதுடில்லி, ஜூன் 22

இலங்கையில் சீன ஆதிக்கத்தினால் இந்திய – இலங்கை உறவில் நெருடல் ஏற்பட்டு வருவதாக சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டு வருகையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் நேற்று புதுடில்லியிருந்து கொழும்புக்குத் மெய்நிகரில் அழைப்பு எடுத்து இலங்கை வெளிவிவகார

☞ 3

## கொரோனா தொற்றால் மேலும் 52 பேர் மரணம்!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி நேற்றுமுன்தினம் மட்டும் 52 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 30 ஆண்களும், 22 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 633 ஆக எகிறியுள்ளது.

# வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவலரின் துப்பாக்கிச்சூட்டில் டிப்பர் சாரதி உயிரிழப்பு

## மட்டக்களப்பில் நேற்று மாலை பதற்றம்







இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்னால் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் டிப்பர் வாகன சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த டிப்பர் வாகன சாரதி அவ்வழியால் ஓட்டோவில் பயணித்துக்கொண்டிருந்தபோது அவரின் தலை மீது துப்பாக் கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, பிள்ளையாரடிப் பகுதியில் உள்ள இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்னால் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

☞ 3

## இன்றும் நாளையுமே நாடாளுமன்றம் கூடும்

நாடாளுமன்ற அமர்வு இவ்வாரம் இரு நாள்கள் மட்டுமே நடைபெறும்.

இதன்படி இன்றும், நாளையும் சபை அமர்வுகளை முன்னெடுப்பதற்கு நேற்று நடைபெற்ற விசேட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நாடாளுமன்ற அமர்வு நடவடிக்கைகள் குறித்துத் தீர்மானிப்பதற்காக நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

இதன்போதே சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றி சபை

☞ 3

## வடக்கில் 47 பேருக்கு கொரோனா

யாழ். பரிசோதனைக் கூடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 47 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

☞ 3

## வவுனியாவில் இரு பெண்கள் கொரோனாவால் உயிரிழப்பு!

(வவுனியா நிருபர்)

கொரோனா வைரஸ் தொற்றால் வவுனியாவில் நேற்று இரு பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

வவுனியா, சூடுவெந்தபுலவு பகுதியைச் சேர்ந்த குறித்த வயோதிபப் பெண்ணொருவர் சிறுநீரக நோய் காரணமாக மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு பின்னர், குருதி சுருதி சுத்திகரிப்பு பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமடைந்துள்ளார்.

☞ 3


# அரச தகவல் இணையத்தில் பெருமளவு தமிழ்க் கொலை

## அதுவும் இனவழிப்புத்தான் என்று சீறுகின்றார் விக்கி

கிராமசேவகர் பிரிவுகளை இணையம் வழியாக தொடர்பு கொள்ளுவதற்காக அரசாங்கத் தகவல் நிலைய இணையம் வெளியிட்டுள்ள விவரங்களில் மிக மோசமான தமிழ்க் மொழி கொலை இடம்பெற்றுள்ளது என்றும், இதனைத் திருத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான க. வி.விக்னேஸ்வரன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

தமிழர்களின் மாவட்டங்கள், பிரதேசங்கள், கிராமங்கள் மற்றும் தென்னிலங்கையின் தமிழ்ப் பெயர்கள் முழுக்க முழுக்க எழுத்துப் பிழையுடன் வெளியிடப்பட்டுள்ளமை

☞ 2



## 2,098 பேருக்கு நேற்று தொற்று

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 98 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதையடுத்து கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 41 ஆயிரத்து 820 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன்,

☞ 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மன்றம் வரவிரும்பினாலும் அதற்கு சட்ட ரீதியாக இடைஞ்சல்கள் உள்ளன என நேற்று முன்தினம் எனது பத்தியில் எழுதியிருந்தேன். வாசகர்களுக்கு அது நினைவில் இருக்கும்.

நேற்று கொழும்பிலிருந்து சட்டத்துறை விற்பன்னர் ஒருவர் தொலைபேசியில் அந்தப் பத்தியில் நான் கொடுத்த தகவல்களைப் பற்றி பேசினார். (அவர் சுமந்திரன் அல்லர்).

அவருக்குத் தமிழ் வாசிக்கும் அறிவு அதிகம் இல்லை. எனவே பத்தியில் கூறப்பட்ட விடயங்களின் மொழி பெயர்ப்பைப் பெற்றிருப்பார் போலும். அவை குறித்து நுணுக்கமாக அவர் அவதானித்திருக்கின்றார் என்பதை அவரது பேச்சில் இருந்து புரிந்து கொண்டேன்.

*"நீங்கள் சொன்னவை எல்லாம் சரி. சட்ட ரீதியில் கனகச்சிதம். ஆனால் உங்கள் வாதத்துக்கு இடையிலேயே பஸில் ராஜபக்ஷ எம்.பியாவதற்கு சட்டத்தில் ஓர் ஓட்டை இருப்பதை உங்களை அறியாமலேயே நீங்கள் கோடி காட்டியிருக்கின்றீர்களே...?"* – என்றார் அவர்.

எனக்கு விளங்கவில்லை.

*"அது எப்படி? நான் ஒரு சட்ட ஓட்டையையும் வெளிப்படுத்தவில்லையே...! பஸில் எம்.பியாவது சட்ட ரீதியாகக் கஷ்டமானது என்பதுதான் எனது கருத்து. அதையே சட்டப் பின்புலத்துடன் சுட்டியிருந்தேன்."* – என்றேன் நான்.

*"எனக்குத் தமிழ் வாசிக்க முடியாது. ஆனாலும் உங்கள் பத்தியில் நீங்கள் குறிப்பிட்டவற்றை நான் விரிவாக அறிந்து கொண்டேன். அவை முற்றிலும் சரியான வாதங்கள்தாம். ஆனால் அவற்றுக்கு இடையே பஸிலுக்கு எம்.பியாக வாய்ப்பு இருப்பதை நீங்கள் சுட்டியுள்ளீர்கள். உங்களை அறியாமலேயே குறிப்பிட்டுள்ளீர்கள்."*– என்று ஆரம்பித்து அவர் சட்ட வியாக்கியானம் அளித்த போது உண்மையில் அதிர்ந்து போனேன்.

சட்ட ஓட்டைகளை இப்படியும் தேடிப் பிடிப்பார்களா என நான் மூக்கில் விரலை வைத்து வியந்து போனேன்.

அவரது விளக்கத்தை வாசகர்களுக்குத் தர வேண்டும். சிக்கலான சட்டப் பிரச்சினையை இலகுவான மொழியில் – எளிய தமிழில் – உங்கள் ஒவ்வொருவருக்கும் புரியத் தர வேண்டும். அதுவும் கூடச் சிக்கல்தான். எனினும் முயற்சிக்கிறேன்.

அவரது விளக்கத்தை மாத்திரம் தந்தால் விடயம் புரியாது. நேற்று முன்தினம் நான் முன்வைத்த சட்ட வாதத்தை – விளக்கத்தை – சுருக்கமாகச் சொல்லி, அதிலிருந்து அவர் குறிப்பிட்ட விடயத்துக்கு வருகிறேன்.

2020 பொதுத் தேர்தல் நடந்த போது அரசமைப்பின் 19ஆவது திருத்தம் நடைமுறையில் இருந்தது. அதன்படி இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் பொதுத் தேர்தலில் போட்டியிட முடியாது. அமெரிக்கப் பிரஜாவுரிமையையும் வைத்திருக் கும் பஸில் ராஜபக்ஷ அதனால் தேர்தலில் போட்டியிட வில்லை. அவரது பெயர் எந்த வேட்பாளர் பட்டியலிலும் இல்லை.

இப்போது 20ஆவது அரசமைப்புத் திருத்தம் வந்து விட்டது. அதன்படி, இரட்டைப் பிரஜாவுரிமை கொண்ட – பஸில் உட்பட – அனைவரும் வாய்ப்புக் கிடைத்துத் தெரிவு செய்யப்பட்டால் நாடாளுமன்ற உறுப்பினர்களாக வர முடியும். அதற்கு எந்தத் தடையும் இல்லை.

பஸிலும் இப்போது எம்.பியாக விரும்புகின்றார் பொதுஜன பெரமுன கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பி. ஒருவர் இராஜினாமாச் செய்து. அந்தப் பதவி வெற்றிடமானால், அதனூடாக பஸில் நியமனம் பெற முடியாதா என்பதுதான் கேள்வி.

பொதுத் தேர்தல் நடந்த போது எந்த வேட்பாளர் பட்டியலிலும் பஸிலின் பெயர் இல்லை. பொதுஜன பெரமுனவின் சார்பில் மாவட்ட ரீதியாகத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் பட்டியலிலோ, தேசியப் பட்டியல் என சமர்ப்பிக்கப்பட்ட பெயர்களிலோ பஸிலின் பெயர் இல்லை.

மொட்டுக் கட்சியின் தேசியப் பட்டியலில் இது வரை எம்.பி. பதவி பெறாமல் வரிசையில் காத்திருக்கும் எஞ்சியோர் அனைவரும், அந்தப் பட்டியலில் இருந்து தாங்கள் விலகிக் கொள்கின்றார்கள் என்று தனித்தனியாக எழுத்துமூலம் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்க, அதைச் செயற்படுத்துவதற்கு ஆணையாளர் ஏற்றுக் கொண்டால் அந்தப் பட்டியல் வெறுமையாகும். அப்போது கட்சி புதுப் பட்டியல் சமர்ப்பிக்க வேண்டிய தேவை ஏற்படும். அந்தப் புதுபட்டியல் மூலம் பஸில் தேசியப்பட்டியல் எம்.பியாக முடியும் என்று குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால், இப்போதுள்ள பட்டியலில் இருக்கும் வேட்பாளர்களில் பலர் மொட்டுக் கூட்டணிக்குள் பஸிலுடன் முரண்பட்டு நிற்கும், விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ, ரிரான் அலஸ் போன்றோரின் கட்சிகளைச் சேர்ந்தவர்கள். பஸிலுக்கு இடமளிப்பதற்காக அவர்கள் மொட்டுக் கட்சியின் தேசியப் பட்டியல் வேட்பாளர் நிலையிலிருந்து விலகமாட்டார்கள். ஆகவே அத்தனை பேரையும் தாண்டி அந்தப் பட்டியல் மூலம் பஸில் எம்.பியாவது இப்போதைக்கு சாத்தியப்படாது, சட்ட ரீதியாக அதற்கு வாய்ப்பில்லை என்று நான் நேற்று முன்தினம் எழுதியிருந்தேன்.

அந்தக் கருத்தே கனகச்சிதமாக சரி என்றார் அந்த சட்டவிற்பன்னர்.

அதற்குப் பின்னர் நான் ஒரு விடயத்தையும் குறிப்பிட்டிருந்தேன்.

2015 பொதுத் தேர்தலில் ரணில் தலைமையில் ஐக்கிய தேசிய முன்னணி களத்தில் நின்றது. அதற்கு எதிராகக் கொழும்பு மாவட்டத்தில் தனது ஜனநாயகக் கட்சியின் சார்பில போட்டியிட்டார் அப்போதைய ஜெனரலான சரத் பொன்சேகா. அவரால் வெல்ல முடியவில்லை. தோற்றார்.

இன்னொரு கட்சியின் சார்பில் போட்டியிட்டவருக்கு தனது ஐக்கிய தேசிய முன்னணியின் தேசியப் பட்டியல் எம்.பி. நியமனத்தை வழங்க முன்வந்தார் ரணில். தேர்தல் ஆணையம் அதை ஏற்றுக் கொண்டது. சரத் பொன்சேகா எம்.பியுமாகி, அமைச்சருமானார் என நான் நேற்று முன்தினம் என் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்

அதைச் சுட்டிக்காட்டினார் அந்த சட்ட விற்பன்னர். *"சரத் பொன்சேகா போல பஸிலும் அதே பாணியில் எம்.பியாவதற்குத் தடை ஏதும் இல்லை."* – என்றார் அவர்.

*"இல்லையே! சரத் பொன்சேகா வேறு ஒரு கட்சியின் வேட்பாளர் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டவர். தேர்தலில் போட்டியிட்டவர். பஸிலின் பெயர் ஒரு வேட்பாளர் பட்டியலிலும் இல்லையே...! பிறகு எப்படி அவரை தேசியப் பட்டியல் எம்.பியாக முடியும்?"*– என்று தொலை பேசியில் நக்கல், நளினத்துடன் சிரித்தேன் நான்.

அவர் ஸீரியஸாகப் பதில் தந்தார்.

*"நீங்கள் மொட்டுக் கட்சியின் தேசியப் பட்டியலில் பஸிலின் பெயரைப் புதிதாகச் சேர்ப்பது பற்றி பிரஸ்தாபித்தீர்களே...! அது சிக்கல் என்பதால் அவர் எம்.பியாவது சிக்கல் என்று எழுதியிருந்தீர்கள். அது சரிதான். ஆனால் பிறிதொரு கட்சியின் தேசியப் பட்டியலில் அவரது பெயர் சேர்க்கப்படுவதை விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ போன்றோரால் தடுக்க முடியாதல்லா? அப்படி அவர் வேட்பாளராகி பின்னர் மொட்டுக் கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பியாக நாடாளுமன்றுக்கு வருவார் – சரத் பொன்சேகா வந்தமை போல"* – என்றார் அவர்.

எனக்குக் கொஞ்சம் விளங்கி, கொஞ்சம் விளங்காமல் இருந்தது போலிருந்தது. அவர் தொடர்ந்து விளக்கினார்.

*"மொட்டுக் கட்சிக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள பல கட்சிகள் கடந்த பொதுத் தேர்தலில் சிற்சில இடங்களில் தனித்துக் களம் இறங்கின. உதாரணத்துக்கு வடக்கு, கிழக்கில் ஈ.பி.டி.பி.; கிழக்கில் அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸ்; யாழ்.மாவட்டத்தில் சுதந்திரக் கட்சி. இவை எல்லாம் ஓரிரு பெயர்களுடன் தங்கள் தேசியப் பட்டியல் பெயர்களைச் சமர்ப்பித்துள்ளன. அந்த ஓரிருவரிடம் விலகல் கடிதங்களைப் பெற்று அந்தப் பட்டியல்களை வெறுமையாக்குவது இன்றைய நிலையில் அப்படி ஒன்றும் பெரிய அரசியல் சிக்கல் மிகுந்த விடயமல்ல. அப்படி ஒரு கட்சியின் தேசியப் பட்டியல் வெறுமையாக்கப்பட அந்த இடத்துக்கு பஸிலின் பெயரைப் புதிதாகச் சேர்த்துக் கொண்டால் போயிற்று."* – என்றார் அவர்.

*"அது இலகுவாகச் செய்யக் கூடிய காரியம்தானே...?"* – என்று கேட்டார் அவர்.

நான் *"உம், உம்"* என்று உச்சுக் கொண்டினேன்.

*"தேசியப் பட்டியல் எம்.பி. ஒருவர் பதவி விலக, அந்த வெற்றிடத்துக்கு மேற்படி பஸிலைத் தமது தேசியப் பட்டியலில் சேர்த்துக் கொண்ட ஈ.பி.டி.பிக்கோ அல்லது சு.கவுக்கோ அல்லது தேசிய காங்கிரஸ்க்கோ, தமது கூட்டணியின் அங்கத்தவக் கட்சி என்ற முறையில் வெற்றிடமாகும் தேசியப் பட்டியல் எம்.பி.பதவியை வழங்குவதாக தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்து, அந்த இடத்தை பஸிலுக்கு மொட்டுக் கட்சியின் செயலாளர் பெயர் குறிப்பிட்டு ஒதுக்கினால் – சரத் பொன்சேகாவின் தேசியப் பட்டியல் எம்.பி. நியமனத்தை ஏற்ற மாதிரி – இந்த நியமனத்தையும் தேர்தல் ஆணையம் ஏற்கத்தானே வேண்டும்.?"*– என்றார் அவர்.

நான் *"உம். சரிதான்"*– என்று மென்று விழுங்கினேன்.

அவர் சிரித்தார். *"இந்த விடயங்களை எல்லாம் அக்கு வேறு ஆணி வேறாகப் பிய்த்து உதறிவிட்டுத்தான் பஸில் தயாராக இருக்கின்றார். அவர் நினைத்தால் எப்போதும் எம்.பியாகலாம். அதற்கான சட்ட ஓட்டைகள் எல்லாம் கச்சிதமாக அளவெடுக்கப்பட்டு தயாராக உள்ளன."* – என்றார்.

*"என்றாலும் உமது சட்ட வாத எழுத்துக்கு – அதையும் கூட தமிழில் வெளிப்படுத்தியமைக்கு – பாராட்டு. இதை சிங்கள, ஆங்கில ஊடகங்கள் கூட இதுவரை உங்களைப் போல நேர்த்தியாகத் தொடவில்லை."* – என்றார் அவர்.

எனக்குக் கிடைத்த இந்தத் தகவலை எனக்குத் தெரிந்த பிற சட்டத்துறையினருடன் நேற்றுப் பேசிப் பார்த்தேன். அவர்களும் ஆச்சரியத்துடன் அந்த சட்ட வாய்ப்பை முழுமையாக ஒப்புக் கொண்டனர். மறுக்க முடியாத சட்ட வலிமை அதில் உள்ளது, அந்த வழியில் பஸில் எம்.பியாக முயன்றால் எந்த வகையிலும் அதைத் தடுக்க முடியாது எனறு உறுதி கூறின அவை.

சட்டத்தில் ஓட்டை தெரிந்தவன், அதில் புகுந்து விளையாடுவான். அதை யாரும் தடுக்க முடியாது என்பது உண்மைதான்.

– மின்னல் –

---

## அரச தகவல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெரும் அதிருப்தியை யும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளதாவும் அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டு கண்டனம் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

அண்மையில், கிராமசேவகர் பிரிவுகளை இணையம் வழியாக தொடர்பு கொள்ளுவதற்கான விவரங்களை அரசாங்கத் தகவல் நிலைய இணையம் வெளியிட்டுள்ளது. இதில் தமிழர்களின் மாவட்டங்கள், பிரதேசங்கள், கிராமங்கள் மற்றும் தென்னிலங்கையின் தமிழ் பெயர்கள் முழுக்க முழுக்க எழுத்துப் பிழையுடன் வெளியிடப்பட்டுள்ளமை எனக்கு பெரும் அதிருப்தியையும் அதிர்ச்சியையும் தருகின்றது.

வட மாகாணத்தின் பெயர்கள் தவறாக எழுதப்பட்ட இடங்கள் சிலவற்றை சுட்டிக்காட்டலாம் என எண்ணுகிறேன். உதாரணமாக யாழ்ப்பாணத்தை யாழ்ப்பாணம் என்றும் முல்லைத்தீவை முல்லைத்தீவு என்றும் எழுதியுள்ளார்கள். அதேபோன்று துணுக்காய் என்பதை துணுக்கை என்றும் கூழாமுறிப்பு என்பதை கோல முறிப்பு என்றும் முழங் காவில் என்பதை முலங்கவில் என்றும் இயக்கச்சியை ஐயக்கச்சி என்றும் பிழை யாக எழுதியுள்ளார்கள்.

இங்கே நான் குறிப்பிட்டவை சில உதாரணங்களே. அரச தகவல் தொடர்பு நிலைய இணையத்தில் (https://gic.gov.lk/gic/index.php/component/findnearest/index.phpoption=com_findnearest) ஏனைய விவரங்களைப் பார்வையிடலாம். இவை அனைத்தும் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு நாட்டின் முக்கிய அரசாங்க அலுவலகத்தின் அறிவிப்பு வெளியீடு இத்தகைய தமிழ் பிழைகளுடன் வெளியிடப்படுவது என்பது சாதாரண விடயமல்ல. இதனைத் திருத்துவதற்கு சரியான வகையில் ஒரு தமிழ் அதிகாரியை அல்லது அலுவலரைக் குறித்த அலுவலகம் கொண்டிருக்கவில்லையா என்ற கேள்வியும் எனக்கு எழுகின்றது.

காலம் காலமாக தமிழ் மொழியைப் பிரயோகிப்பதில் அரச நிர்வாகம் கண்டு வரும் தோல்வியின் தொடர்ச்சியாகவும், தமிழ் மொழி மீதான மதிப்பற்ற தன்மையாகவும், அலட்சியப் போக்காகவுமே இது நடந்திருக்கின்றது என்பதை மாத்திரம் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாணத்தின் பெயர்கள் மாத்திரமின்றி ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அவமதிப்பு செய்யப்பட்டுள்ளனர் என்றே இதனைக் கொள்ள வேண்டும்.

ஏற்கனவே பேருந்துகளில் தமிழ் மொழியை தூஷண வார்த்தைகளாக எழுதப்பட்டதை கண்டு மிக வேதனை அடைந்திருக்கிறேன். தென்னிலங்கை யில் தான் இதனை அதிகமாக கண்டிருக் கிறோம். அத்துடன் பல அரச திணைக் களங்களில் கூட தமிழ்மொழி பிழையாக எழுதப்பட்டு இருப்பதை ஊடகங்கள் பலவும் சுட்டிக் காட்டியுள்ளன.

அதேபோன்று அரச சுற்று நிருபங்கள் கூட தமிழ்மொழியில் வெளியிடப் படாமல் தனிச் சிங்களத்தில் வருவதனாலும் கூட இன்றுவரை தமிழ் மக்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். அத்துடன் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சில திணைக்களங்களுக்குச் சென்றால், மக்கள் தமிழில் உரையாடி தமது தேவைகளை நிவர்த்தி செய்ய முடியாத நிலையும் காணப்படுகின்றது. தமிழுடன் தமிழர்களும் இங்கே புறக்கணிக் கப்பட்டுள்ளனர். மொழி என்பது ஓர் இனத்தின் அடையாளம். தமிழ்மொழி இரண்டாயிரம் வருடங்களுக்கு முந்தைய வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டது. செம்மொழி என்ற அந்தஸ்தையும் பெற்றிருக்கிறது.

இன்று தமிழ்மொழி இல்லாத நாடு இல்லை என்று சொல்லலாம். உலக நாடுகள் பலவற்றில் தமிழுக்கு மிக உயரிய மதிப்பு வழங்கப்படுகின்ற போது, தமிழ் மக்கள் பல ஆயிரம் வருட பூர்வீகத்தை கொண்ட தங்கள் நிலத்தில் சுதேசிகளான தமிழ் மக்களின் தமிழ் மொழி கொலை செய்யப்படுகின்றமை பெரும் மன உளைச்சலையும் வேதனையையும் தருகின்றது.

இந்த விடயத்தில் நான் அரசை மாத்திரம் குற்றம் சொல்ல மாட்டேன். டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் காலம் காலமாக அமைச்சராக இருந்து தமிழர்களுக்கு தொண்டு புரிகின்றனர் என்று சொல்லி வருகின்றனர். தமிழ் மக்களுக்கு அதிகாரத்தையோ அல்லது அபிவிருத்தியையோ கூட இவர்களினால் பெற்றுக்கொடுக்க முடியாது போனாலும் ஆகக்குறைந்தது தமிழ்மொழிக் கொலையையாவது தடுக்க முடியாதகையறு நிலையில் இருக்கிறார்கள்.

தனிச் சிங்களச் சட்டமும், தமிழ் மொழி மீதான புறக்கணிப்பும், மொழி அழிப்பும் இந்த தீவில் பாரிய விளைவுகளை உண்டு பண்ணிய பின்னரும் கூட தொடர்ந்தும் தமிழ்மொழி புறக்கணிக் கப்பட்டும் கொலை செய்யப்பட்டும் வருகின்றது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.ஆகவே, நான் மேலே சுட்டிக் காட்டியுள்ள விடயத்தில் அரசாங்க தகவல் நிலைய இணையம் தவறுகளை திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். மொழியை அழிப்பதும் இன வழிப்புத் தான் என்பதை மறந்து விடக் கூடாது என்பதையும் இந்த இடத்தில் நினைவுபடுத்திக்கொள்கிறேன் எனவும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## 2, 098 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 7 ஆயிரத்து 287 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 31ஆயிரத்து 900 ஆக அதிகரித்துள்ளது.

## இன்றும் நாளையுமே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கைகளை இரு நாள்களுக்கு முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 24 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 18 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 03 பேரும், மன்னார் மாவட்டத்தில் 02 பேரும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## வவுனியாவில் இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, வவுனியா, சகாயாமாதாபுரம், வைரவர் கோயிலடிப் பகுதியில் வீடொன்றி நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு முன்னரே குறித்த ஏழு பேரில் வயோதிபப் பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார். (100)

# மீள் கேள்வி அறிவித்தல்
# பருத்தித்துறை நகரசபை

**குறிப்பு : 2021.05.07 ஆம் திகதிய காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் ஆனது கொவிட் 19 தொற்று காரணமாக நடைமுறைப்படுத்தமுடியாது போனமையால் கேள்வி இரத்துச் செய்யப்பட்டு மீளவும் கேள்வி கோரப்படுகிறது.**

1. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டிக் கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2016.09.30ஆந் திகதிய 04/2016(i) இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின்படி வடமாகாண எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட பெறுகைதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அட்டவணையில் காட்டியபடி கட்டட / வீதிப்புனரமைப்புக்கு பொருத்தமான தரங்களில் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு செய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் (தொலைபேசி இலக்கம்:- 021 - 226 - 3213) மேலதிக தகவல்களையும், பெறுகை ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
6. பெறுகைப் பத்திரம் வழங்கப்படும் திகதி 22.06.2021 ஆம் திகதி தொடக்கம் 2021.07.09 ஆம் திகதி பி.ப.02.00 மணிவரை அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 2000/= இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. பெறுகை ஆவணங்களை இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை எனும் முகவரிக்கு 2021.07.12 ஆந் திகதி பி.ப 15.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ சேர்ப்பிக்க வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். பெறுகை நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் பெறுகைதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பெறுகை திறக்கப்படும்.
8. பெறுகையானது சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து அறுபத்து மூன்று (63) நாட்கள் (14.09.2021) வரையும் செல்லுபடியாகும்.
9. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் 2021.07.05 ந் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும். சொந்த செலவில் பங்குபற்றலாம்.
10. பெறுகை தொடர்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் அதிகாரம் பெறுகைக்குழுவின் தலைவருக்கே உண்டு.
11. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியன் ரூபாவில் (வற் நீங்கலாக) | ஒப்பந்த காலம் | நிதி மூலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு ரூபா | செல்லுபடியாகும் காலம் |
| 1.கடற்கரை வீதியில் 4ஆம் குறுக்குத்தெரு தொடக்கம் 3ஆம் குறுக்குத்தெரு வரையான நடைபாதை அமைத்தல் - Stage I | 2.65Mn | 90 நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2020 | C9/C8 (building) | 26500.00 | 11.10.2021 |
| 2. நாச்சிமார் கோவில் வீதி மிகுதி வேலை (2 ஆம் குறுக்குத்தெரு 3ஆம் ஒழுங்கை), பருத்தித்துறை மீன்சந்தையில் மோட்டார் சைக்கிள், சைக்கிள் தரிப்பிடம் அமைத்தல். | 0.790Mn | 60 நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2020 | C9/C8 (building & Road) | 7900.00 | 11.10.2021 |
| 3.மாம்பரம்பற்றை வீதி, வளலாய் ஒழுங்கை மிகுதி வேலை . | 1.631Mn | 60 நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2020 | C9/C8 | 16400.00 | 11.10.2021 |
| 4.இலட்சுமணன் தோட்டம் வீதி 2 ஆம் ஒழுங்கை, ஒரு தானைவீதி2ஆம்ஒழுங்கை, பருத்தித்துறை வீதி 14 ஆம் ஒழுங்கை (தாமர் வீதி) | 2.180Mn | 60 நாட்கள் | சபை நிதி 2021 | C9/C8 | 21900.00 | 11.10.2021 |
| 5.பிராமண வீதி | 1.270Mn | 60 நாட்கள் | சபை நிதி 2021 | C9/C8 | 12700.00 | 11.10.2021 |
| 6.சுப்பர்மடம் 6ஆம், 7ஆம் ஒழுங்கை | 0.535Mn | 60 நாட்கள் | சபை நிதி 2021 | C9/C8 | 5350.00 | 11.10.2021 |
| 7.ஐயனார் கலட்டி வீதி 3ஆம் ஒழுங்கை | 0.510Mn | 60 நாட்கள் | சபை நிதி 2021 | C9/C8 | 5100.00 | 11.10.2021 |

**திரு.யோ.இருதயராஜா**
**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,**
**பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை.**
**2021.06.22**

# தமிழகத்தில் ஈழ அகதிகளுக்கு குடியுரிமை வழங்க வலியுறுத்து

நீண்ட காலமாக இந்தியாவில் வசிக்கும் ஈழத் தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்கத் தேவையான சட்டங்களையும் சட்டத் திருத்தங்களையும் மேற்கொள்ளுமாறு மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும் என தமிழக ஆளுநர் பன்வரிலால் புரோஹித் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் 16-ஆவது சட்டமன்ற கூட்டத்தொடர் ஆளுநர் உரையுடன் நேற்றுத் தொடங்கியது. இதன் போதே தமிழக ஆளுநர் பன்வரிலால் புரோஹித் தமிழக அரசின் கொள்கையை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது உரையாற்றிய அவர் -

நீண்ட காலமாக இந்தியாவில் வசிக்கும் ஈழத் தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்க தேவையான சட்டங்களையும் சட்டத் திருத்தங்களையும் மேற்கொள்ளுமாறு மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும்.

அதேபோன்று, ஈழத் தமிழர்களுக்கு சம உரிமை மற்றும் அரசியல் உரிமைகளை உறுதி செய்ய இலங்கை அரசை அறிவுறுத்துமாறு மத்திய அரசிடம் தமிழக அரசு சார்பில் வலியுறுத்தப்படும். - என்றார்.

## ஜெய்சங்கர் - தினேஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுடன் விரிவான பேச்சுக்களில் ஈடுபட்டார்.

பேச்சுகளின் விவரம் உடனடியாக வெளியாகவில்லை.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் மட்டும் தனது டுவிட்டரில் இந்தப் பேச்சுக் குறித்து சுருக்கமான குறிப்பு வெளியிட்டிருந்தார்.

"பேச்சுகள் நன்றாக நடந்தன. எங்கள் நாடுகளின் இருதரப்பு நிகழ்ச்சி நிரல் மீளாய்வு செய்யப்பட்டது.

"பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா நாடுகள் அமைப்பு ('பிம்ஸ்டெக்'), இந்தியப் பெருங்கடல் நாடுகளின் ரிம் அமைப்பு (ஐ.ஓ.ஆர்.ஏ) மற்றும் அது போன்ற பிராந்தியக் கட்டமைப்புப் பொறிமுறைகளின் செயற்பாடுகள் குறித்தும் பேசினோம். தொடர்ந்தும் தொடர்பில் இருப்போம்." - என்று ஜெய்சங்கர் நேற்றுத் தெரிவித்தார்.

எனினும், இலங்கையில் அதிகரித்து வரும் சீனப் பிரசன்னத்தை ஒட்டிய இந்தியாவின் அதிருப்தியே, இவ்வாறு திடீர் உரையாடலுக்குக் கால்கோள் இட்டிருக்கும் என்று சர்வதேச அவதானிகள் தரப்பில் கூறப்பட்டது.

இந்தப் பேச்சின் உள்விவரங்கள் இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## வியாழேந்திரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸ் கான்ஸ்டபிளின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த டிப்பர் வாகன சாரதி, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு, சின்ன ஊரணியைச் சேர்ந்த மகாலிங்கம் பாலசுந்தரம் (வயது 35) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட கான்ஸ்டபிள் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

உயிரிழந்த டிப்பர் வாகன சாரதிக்கும் பொலிஸ் உத்தியோகத்தருக்கும் இடையே கடந்த சில நாள்களுக்கு முன்னர் கடும் வாக்குவாதம் ஏற்பட்டிருந்தது எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதனை அடிப்படையாகக்கொண்டே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் அவரது வீட்டில் இருக்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சம்பவத்தையடுத்து இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்னாலும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன்னாலும் மக்கள் ஒன்றுகூடினர். இதனால் அந்தப் பகுதிகளில் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

பெருமளவானோர் ஒன்றுகூடி குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர்.

இதையடுத்து குறித்த பகுதிகளில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தமிழ்க் கொலையும் இனவழிப்பும்

தமிழ் மொழியையும் தமிழ் மக்களையும் தென்னிலங்கை பௌத்த, சிங்கள இனவாத அரசுகள் எப்படி நடத்துகின்றன என்பதற்கான ஓர் உதாரணத்தைக் காட்டி சீற்றத்துடன் கருத்து வெளியிட்டிருக்கின்றார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வீ.விக்னேஸ்வரன்.

அரச தகவல் நிலைய இணையத்திலேயே தமிழர்களின் மாவட்டங்கள், பிரதேசங்கள், கிராமங்கள் மற்றும் தமிழ்ப் பெயர்கள் முழுக்க முழுக்க எழுத்துப் பிழைகளுடன் வெளியிடப்பட்டுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

சரியோ, பிழையோ முன்னைய நல்லாட்சி அரசு இந்த விடயங்களைக் கவனிக்கும் பொறுப்பை தனியாக ஓர் அமைச்சுப் பிரிவை ஏற்படுத்தி, அதனைத் தமிழ் அமைச்சர் ஒருவரிடம் கையளித்து, ஓரளவு பொறுப்புடன் செயற்பட்டது. அமைச்சர் மனோ கணேசன் தமிழ் மொழி நடைமுறைப்படுத்தல் விவகாரத்தையும் ஓர் அமைச்சுப் பிரிவாகக் கையாளும் நிலைமை இருந்தது.

ஆனால், கோட்டாபய அரசு – ராஜபக்ஷக்களின் அதிகாரம் – ஏற்பட்டதும், தமிழர்களுடன் தமிழும் புறக்கணிக்கப்பட்டது. பெரும்பான்மைத் தமிழர்களின் மதமான இந்து சமய விவகாரமும் அமைச்சு நிலையிலிருந்து தனித் திணைக்களமாக மாற்றப்பட்டு தரம் இறங்கியது.

நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டிக் காட்டுகின்றமை போன்று மொழி என்பது ஓர் இனத்தின் அடையாளம். தமிழ்க் கொலை என்பது அவர் சுட்டுவது போல ஒரு வகையில் இனவழிப்புத்தான்.

இலங்கைத் தீவில் தமிழ் மொழி இரண்டாயிரம் வருடங்களுக்கு முந்திய வரலாற்றும் பாரம்பரியமும் தொன்மையும் கொண்டது. அது உலகளாவிய ரீதியில் செம்மொழி அந்தஸ்தையும் பெற்றது.

பூமிப் பந்தெங்கும் இன்று தமிழர்கள் சிதறிப் பரந்து வாழ்கின்றார்கள். அங்கெல்லாம் தமிழ் உயர்வாக மதிக்கப்படுகின்றது.

ஆனால், தமிழ் மக்களின் தாயக பூமியில், பாரம்பரியமாக பல நூறு தலைமுறைகளாக அவர்கள் வாழும் சொந்த மண்ணில், அவர்களை ஆட்சி செய்யும் தரப்புகளால் தமிழ் கொலை செய்யப்படுவது நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டுகின்றமை போல இனவழிப்புத்தான்.

பிரிட்டனிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல், இந்த இலங்கைத் தீவின் ஆட்சி அதிகாரத்தை பெரும்பான்மை இனத்தவர்கள் என்ற முறையில் கைப்பற்றிக் கொண்ட பௌத்த, சிங்களப் பேரினவாதிகள், இந்தத் தீவைத் தாயகமாகக் கொண்ட தமிழர்களின் தேசத்தை அழித்துச் சின்னாபின்னமாக்குவதையே தமது இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

இந்தத் தீவில் தமிழர்கள் ஒரு தேசமாக – ஒரு தேசிய இனமாக – தனித்துவ இனக்குழுமமாக – நிலைபெற்று வாழ்வதற்குக் காரணமான ஒவ்வொரு கட்டுமானத்தையும் சிதைத்தழிப்பதன் மூலம் அவர்களின் தாயகத் தனித்துவ உரிமையை இல்லாதொழித்து, இந்தத் தீவு முழுமையாகத் தனித்து சிங்கள, பௌத்தவர்களுக்கு மட்டுமே உரியது என்ற பேரினவாத நிலைப்பாட்டை நிலைநிறுத்துவதே அவர்களின் எண்ணம்.

தமிழரின் தேசிய வாழ்விற்கு ஆதாரமான – அடித்தளமான – ஒவ்வொரு அம்சத்தையும் படிப்படியாகத் தகர்த்து விடும் நாசகாரத் திட்டமாகவே இந்த சதி நாச வேலை கடந்த ஏழு தசாப்தங்களாகக் கட்டவிழ்ந்து வருகின்றது.

ஒன்றுபட்ட தேசிய இனக் கட்டமைப்பாகத் திகழும் தமிழினத்தின் தனித்துவ அடையாளங்களாக அவர்களின் மொழி, வாழ்க்கை முறை, பண்பாடுகள், தனித்துவத் தாயகமான வாழிடம், தலைமுறைத் தொடர்ச்சி எனப் பல அம்சங்கள் விளங்குகின்றன. அவை அனைத்தையும் இலக்கு வைத்துத் தாக்கி அழிப்பதை இந்த இன ஒடுக்குமுறை நடவடிக்கை கொண்டிருந்தமையை வரலாறு கூறுகின்றது.

பல முனைகளிலில் இருந்து, பல வடிவங்களில் நுட்பமாகத் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட இந்த இனவழிப்புத் தாக்குதலில் பிரதானமானது தமிழர்களின் தனித்துவ இருப்புக்கு அடையாளமாக விளங்கும் தமிழ் மொழியை சிதைத்துக் சின்னாபின்னமாக்குவது.

தொடர்ந்து தாயகத் தனித்துவத்தை நாசமாக்குவது, தமிழர்களின் வேலைவாய்ப்பு, கல்வி, வாழ்வியல் உரிமைகளை மறுப்பது, தாயக மண்ணிலிருந்து அவர்களை விரட்டுவது என்று இந்தப் பேரினவாத ஒடுக்குமுறைத் திட்டம் நீண்டது. மிக நுட்பமானது. பெரும் நாசகார விளைவுகளைத் தரவல்லது.

உலகெங்கும் பல நாடுகளில் தமிழுக்கு உயரிய மதிப்பு வழங்கப்படும் போது, தமிழ் மக்கள் பல்லாயிரம் ஆண்டு காலப் பூர்வீகத்தைக் கொண்ட அவர்களின் சுதேசிய மண்ணில் தமிழ் மொழி கொலை செய்யப்படுவதற்கான ஏதுநிலைகளை இந்த ஆட்சிப்பீடம் பேணுகின்றது.

தனிச் சிங்களச் சட்டமும், தமிழ்மொழி திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுதலும், இப்படி தமிழ் மொழி படுகொலை செய்யப்படுவதும் சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறை நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டத்தின் பல்வேறு அங்கங்கள்தான்.

# டெல்டா வைரஸ் தொடர்பாக மட்டு. மக்களுக்கு எச்சரிக்கை

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் விடுத்தார்




நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள டெல்டாவைரஸ், மட்டக்களப்பிற்கும்வருவதற்கு சந்தர்ப்பம் அதிகம் காணப்படுவதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் நாகலிங்கம் மயூரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கடந்த 24 மணி நேரத்தில் 89 பேர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன் 2 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பில் அண்மையில் அல்பா வேரியன் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் இலங்கையில் தற்போது டெல்டா திரிவு இனங்காணப்பட்டுள்ளது.

இதுவும் மட்டக்களப்புக்கு வரக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம் காணப்படு கின்றன.

மேலும் கொரோனா வைரஸ் தொற்றின் மூன்றாவது அலையில், 3 ஆயிரத்து 968 பேர் மட்டக்களப்பில் பாதிக்கப்பட்டுள்ளமையுடன் 63 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆகையால் மக்கள் அனைவரும் ஒன்று கூடுவதைத் தவிர்த்து, சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக மேலும் கடைப்பிடிக்க வேண்டும். – என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# 6 கிராமசேவகர் பிரிவுகள் கொத்மலையில் முடக்கம்

நுவரெலியா – கொத்மலை சுகாதார பிரிவுக்குட்பட்ட 6 கிராம சேவக பிரிவுகள், கொரோனா அச்சுறுத்தல் காரணமாக முடக்கப்பட்டுள்ளன.

அதாவது, ஹபுகஸ்தலாவ கிராம சேவகர் பிரிவு, வீரபுர கிராம சேவகர் பிரிவு, களுதுமெத கிராம சேவகர் பிரிவு, பெரமான தெற்கு கிராம சேவகர் பிரிவு, டன்சினன் கிராம சேவக பிரிவு மற்றும் கொரகலயா கீழ்பிரிவு கிராம சேவகர் பிரிவு ஆகியனவே நேற்று (திங்கட்கிழமை) முதல் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றன என கொத்மலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பீ.சீ.ஆர் பரிசோதனை முடிவுகள் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளன. அதில் 168 பேருக்கு வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே இந்தப் பகுதிக்குள் உட் பிரவேசிக்கவும் அங்கிருந்து வெளிச் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் இது மீள் அறிவிக்கும் வரை அமுலில் இருக்கும் எனவும் கொத்மலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

மேலும் கொத்மலை சுகாதார பிரிவுக்குட்பட்ட 6 கிராம சேவக பிரிவுகளுக்கு பலத்த பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 24 மணி நேர விபத்துக்களில் நால்வர் பரிதாபகரமாகச் சாவு

*நேற்றுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.*

*வெலம்பொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற விபத்தில் 80 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.*

*மேலும் தலங்கம பொலிஸ் பிரிவில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் வீதியில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகினார்.*

*இதனை அடுத்து ஸ்ரீஜெயவர்தனபுர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மலாபேயில் வசிக்கும் 29 வயதுடையவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.*

*இதற்கிடையில், புத்தளம் - திருகோணமலை வீதியில் மகாபுலங்குலம பகுதியில் இரு லொறிகள் மோதி இடம்பெற்ற விபத்தில் புத்தளத்தில் வசிக்கும் 46 வயதுடைய ஒருவர் உயிரிழந்தார். மேலும் லிந்துல தலவாக்கலை வீதியில் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதை செலுத்தி சென்ற 43 வயதுடையவர் உயிரிழந்துள்ளார்.*

# மதுபானசாலைகள் நேற்று திறப்பு அலைமோதும் மதுப் பிரியர்கள்



நாடு முழுவதும் அமுலில் உள்ள பயணக்கட்டுப்பாடு நேற்று அதிகாலை நான்கு மணியுடன் தளர்த்தப்பட்டது.

இந்நிலையில், அனுமதிப்பத்திரம் பெற்ற எவ்.எல். 4 மற்றும் எவ்.எல். 22 ஏ சான்றுள்ள மதுபான சாலைகளைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே, குறித்த அனுமதிப் பத்திரம் பெற்ற மதுபானசாலைகளில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி விற்பனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒரு மாதத்துக்கும் மேலாகப் பயணத் தடை காரணமாக மதுபானசாலைகள் மூடப்பட்டிருந்த நிலையில் நீண்டநாள்களாகத் தவித்த மதுப்பிரியர்கள் நேற்று மதுபானசாலைகளின் முன் அலை மோதுகின்றமையை நாடெங்கிலுமுள்ள மதுபானசாலைகளில் காணக்கூடியதாக இருந்தது




இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் Kalaikkathiredu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

தொகுப்பு:-
எஸ். வனோஜா

## 28ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**271. உலக ஈரநில தினம் எப்போது?**
**272. உலகில் நிலப்பரப்பில் பெரிய நாடு எது?**
**273. 2ஆம் உலக மகாயுத்தத்தின்போது ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய நகரங்கள் மீது வீசப்பட்ட 2 அணுகுண்டுகளினதும் பெயர் யாது?**
**274. உலகிலேயே மூன்று தலைநகரங்களைக் கொண்ட நாடு?**
**275. உலகில் அதிக வேகத்தில் பாயும் ஆறு எது?**
**276. இலங்கையின் முதல் ஆளுநர் நாயகம் யார்?**
**277. சீனாவின் தற்போதைய ஜனாதிபதி யார்?**
**278. அதிக பயங்கரமான கொரோனா வைரஸ் திரிவான டெல்டா திரிவுடன் இலங்கையின் முதன்முதலில் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட பகுதி எது?**
**279. முதலாவது World Cricket Test Championship போட்டி இங்கிலாந்தின் எந்த மைதானத்தில் நடைபெறுகிறது?**
**280. ஆறுகளே இல்லாத நாடு எது?**

பெயர் :- ................................................. அடையாள அட்டை:- ................................
முகவரி :- ................................................. மின்னஞ்சல் முகவரி:- ...............................
தொலைபேசி இலக்கம்:- ............................

## 26ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**251.** குமார் சங்கக்கார
**252.** பைஸர்
**253.** ஜேம்ஸ் டெய்லர்
**254.** செப்ரெம்பர் 27
**255.** தென்சூடான்
**256.** இ.ஏ. நுகேவெல/ நுகாவெல
**257.** ஹென்றிக் பெக்ரல்
**258.** Microsoft Teams (MS Teams)
**259.** பேட்ரிக் பிளாங்க்
**260.** தோமஸ் அல்வா எடிசன்

## 20ஆம் திகதி வெளியான 26ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1. ஐ.கார்த்திகன் - யாழ்ப்பாணம்
2. எம். வர்ணபாலன் - யாழ்ப்பாணம் (09சரி)
3. எஸ். சதுர்ஜினி - அல்வாய் (09 சரி)
4. ஜே. வினோஜன் - குடத்தனை (09 சரி)
5. ஆர். மாலதி - உடுப்பிட்டி (08 சரி)
6. ஏ. துஷான் - நீர்வேலி (08 சரி)
7. எஸ். ஸ்ரீஇராமச்சந்திரன் - வத்திராயன் - (08 சரி)
8. கே. அனுஷன் - ஏழாலை ( 08 சரி)
9. ஏ.சி. ஸ்ரீதரன் - கொழும்பு - (07 சரி)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றிய 17 சம்பவங்கள் குறித்து விசாரணை

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான 17 சம்பவங்கள் தொடர்பாகக் குற்றவியல் புலனாய்வுத்துறை மற்றும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு என்பன தற்போது விசாரித்து வருகின்றன என காவல்துறை தெரிவித்துள்ளது.

மேற்படி விசாரணைகள் தொடர்பாக 32 பேர் மீது கேகாலை, கண்டி, குருநாகல், புத்தளம் மற்றும் கொழும்பு மேல் நீதிமன்றங்களில் சட்டமா அதிபர் ஏற்கனவே ஒன்பது வழக்குகளைப் பதிவு செய்துள்ளார்.

மேலும்,சட்ட மா அதிபர் திணைக்களம், குற்றப்புலனாய்வு பிரிவு மற்றும் பயங்கரவாத புலனாய்வு பிரிவு ஆகியவற்றின் சட்ட அதிகாரிகள் எஞ்சியுள்ள எட்டு சம்பவங்கள் தொடர்பில் வழக்குகள் பதிவு செய்கின்றமை தொடர்பில் விவாதித்து வருகின்றனர்.

அதன்படி, இந்த எட்டு சம்பவங்கள் தொடர்பாக விசாரணை முடிந்தவுடன் விரைவில் வழக்குகள் பதிவு செய்யப்படவுள்ளன என்று சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி தலவாக்கலையில் விருந்துபசாரம்

நுவரேலியா, ஜூன் 22

தலவாக்கலை, மேல் கொத்மலை நீர்த்தேக்கத்துக்கு அருகிலுள்ள ஒரு தனியார் விருந்து மண்டபத்தில் விருந்து நடத்தியமைக்காக தலவாக்கலை - லிந்துலை நகர சபைத் தலைவர் மற்றும் 6 பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்கள் சம்பந்தப்பட்ட ஒரு கூட்டத்தை நகரசபை தலைவர் நடத்தி வருகிறார் என 119 அவசர பிரிவுக்கு கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து தலவாக்கலை பொலிஸார் நகர சபை தலைவர் மற்றும் ஏனையோரைக் கைது செய்தனர்.

காவல்துறையினர் சம்பவ இடத்துக்கு வந்தபோது விருந்தில் கலந்துகொண்ட மற்றொரு குழுவினர் தப்பி ஓடினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நகர சபைக்குச் சொந்தமான வாகனத்தையும் பொலிஸ் காவலில் எடுத்துள்ளனர். தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தை மீறியமைக்காக தலைவர் மற்றும் 6 பேர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் அவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## வவுனியா வைத்தியசாலையில் நோயாளரைப் பார்வையிட 'பாஸ்'

வவுனியா வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு பாஸ்நடைமுறைஅமுல்படுத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு ஒருவரை மாத்திரம் உட்செல்ல அனுமதிப்பதற்காகவே குறித்த பாஸ் நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கொவிட் தொற்று பரவல் தீவிரமடைந்துள்ளமையால் மக்களின் நலன் கருதி இந்த நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளி. மாவட்டப் பொது வைத்தியசாலையில் ஆய்வுகூட கட்டடத்தொகுதி நிறுவ ஆராய்வு

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கான ஆய்வுக்கூட கட்டடப் பணிகளை நிறுவுதல் தொடர்பில் ஆராய்வதற்காகச் சுகாதார சேவைகள் ஆய்வுகூட சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்துள்ளார்.

வவுனியாமாவட்டவைத்தியசாலைக்கு சனிக்கிழமை விஜயம் செய்த அவர், தொடர்ந்து வவுனியா மாவட்ட வைத்தியசாலையினுடைய நிலைமைகளைப் பார்வையிட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பி.சி.ஆர். ஆய்வுக்கூடம் தொடர்பிலான ஆயத்தப் பணிகளைப் பார்வையிட்டுள்ளார்.

அத்துடன் தற்போது வவுனியா வைத்தியசாலை செயற்பாடுகள் தொடர்பிலும் பார்வையிட்டுக் கலந்துரையாடிய அவர் ஞாயிறு பிற்பகல் 4 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு விஜயம் செய்தார்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஆய்வுகூட கட்டடத் தொகுதி நிறுவுவது தொடர்பில் ஆராய்வதற்காகவும் ஆலோசனைகளை வழங்கும் பொருட்டும் இவர் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

தற்போதைய வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளராக உள்ள வைத்தியர் இராகுலன், கிளிநொச்சி வைத்தியசாலைப் பணிப்பாளராக இருந்தபோது இதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

சுகாதார அமைச்சின் ஊடாக குறித்த ஆய்வுகூட கட்டடத் தொகுதி நிறுவுவதற்கு 5 கோடி ரூபா நிதி கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் பிரதியமைச்சரும் வைத்தியசாலைக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 43



# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**135. புலம்பெயர் சமூகத்தில் இயக்கத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தியோரின் சின்னத்தனமான செயற்பாடுகள் பற்றிப் பேசப்பட்டனவா?**

ஆம். அதைத் தொடர்ந்து கிட்டு என்னுடன் பேசிய போது தான் அப்படியான வழிகாட்டல்கள் செய்ய வில்லை என்றும் இவற்றை நிவர்த்திக்கின்றேன் என்று பலவற்றையும் விளங்கப்படுத்தினார். நானும் அவருக்குக் கட்டாய ஆட்சேர்ப்பு மற்றும் வயது குறைந் தவர்கள் ஆயுதப்புரட்சிக்கு பயிற்றப்படுகின்றமை யைப் பற்றி வரும் படங்கள், கட்டுரைகள் என்பவற்றைச் சுட்டிக் காட்டி விடுதலையில் வெற்றிபெற சர்வதேசத்துட னான ஓர் இணைந்த பயணம் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினேன். தான் தனிப்பட்ட ரீதியில் பலவற்றை புரிந்து கொள்கிறார் எனவும் நாட்டுக்குத் திரும்பிச் சென்றதும் அவற்றில் மாற்றம் கொண்டு வர உத்தேசங்கள் இருக்கின்றன எனவும் சொன்னார்.

புலம் பெயர் மக்கள் அவர் தொடர்ந்து இங்கேயிருப் பதை விரும்புகிறார்கள் என்பதால் அவர் இங்கேயே இருந்தால் என்ன என்றதும் சம்பாசணையில் இடை தூக்கியது.

இவற்றில் பல பிரபாகரனுடன் நாட்டிலே நேரடியாக பேசப்படவேண்டியவை. அவை முடிந்த பின் பின்னர் வரக் கூடிய சந்தர்ப்பம் வந்தால் அப்படிச் செய்யலாம் என்பது அவரது மனதிலிருந்தது.

இந்தியாவுடன் விடுதலைப் புலிகளுக்கு ஒரு புரிந் துணர்வு வருவதற்கு உரிய வாய்ப்புக்கள் தன்னை பொறுத்தளவில் அரிது என்றும், ஆகவே தாங்கள் ஸ்ரீலங்கா படைகளைக் கட்டுக்குள் வைத்து, அவர்களால் தங்களை வெல்ல முடியாது என்ற படையணிகளை உருவாக்குவதன் மூலமே அவர்களுடனான பேச்சு வார்த்தைகளில் முன்னேறலாம், தங்களது லட்சி யத்தை அடையலாம் என்ற நம்பிக்கை அவரில் இருந் தது.

அதைப் பற்றி மேலும் பேச்செடுத்தேன். "உங்க ளுக்கு அப்பொழுதிலிருந்தே பிரபாகரனின் பிடிவாதம் தெரியும். அவரின் உறுதியும் தெரியும். அந்த நம்பிக் கையில்தான் நாம் எதையும் செய்ய வேண்டும் – நானும் கூட" – என்பது அவரது அபிமானத்திலிருந்து



வந்த வார்த்தைகள்.

அந்த அணுகுமுறைகளில் கிட்டு நாடு சேர்ந்ததும் நானும் எவ்வளவோ மாற்றங்களை சர்வதேச ரீதி யில் எதிர்பார்த்தேன். அவை, அவர்கள், ஒரு மக்களின் விடுதலையில் அரசியலும் இராணுவ அமைப்பும் கலந்தனவாக, சர்வதேச விதிகளுக்கு கட்டுப்பட்டதாக, இயங்குகின்றனர் என சர்வதேசம் ஏற்க வழி வகுக் கும் என எண்ணினேன்.

**136. கிட்டு நாட்டுக்கு போய்சேரவில்லையே?**

ஒரு மாவீரராக, தான் நேசம் கொண்ட இனத் தின் விடுதலைக்காக தான் எடுத்துக் கொண்ட சத்தி யப்பிரமாணத்தில் இருந்து விலகாமல், இந்து சமுத் திரத்தில் தன்னுயிரையும் சக போராளிகளின் உயி ரையும் ஈந்து சங்கமமாகினார். அது வேதனையானது. இந்தியாவிற்கு அடிபணியோம் என்ற உறுதி, தாங் கள் பயணம் செய்த கப்பலை அவர்களின் கட்டளையை ஏற்று இந்தியத் துறைமுகத்திற்குத் திருப்பமாட்டோம் என்று தகர்த்தலில் இருந்தது.

கிட்டு லண்டனை விட்டு திட்டப்படி கிளம்பவில்லை. பல வேலைகள் முடிக்கப்படாமலேயே அவசர அவச ரமாக பிரித்தானிய அரசு விடுத்த – வெளியேற வேண் டும் என்ற – உத்தரவால் வெளியேற வேண்டுவதான நிர்ப்பந்தத்தால் – புறப்பட்டார்.

கிட்டுவின் வருகையால் ஐரோப்பாவில் புலம் பெயர் அமைப்புக்களிலே இருந்த பூசல்களில் தமிழ் மக்களின் தனித்துவமான பெயரில்லா தகவல்களான (Anonymous Petitions ) காரணமாக அன்றில், அவர் ஈடுபட்ட ஆயுத ஏற்றங்கள் தொடர்பில் இந்தி யாவில் பிடிபட்ட அவர்களது அங்கத்தி னர் ஒருவரின் வாக்கு மூலமோ எதுவோ, இவற்றால் இந்திய அரசு அவர் அங்கி ருந்து ஆயுதக் கொள் வனவிலும் அவற் றைப் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஏற்றுமதியிலும் ஈடுபடுகிறார் எனக் குறிப் பிட்டு அவரை நாடு கடத்தக் கோரியது. புலம்பெயர்வாளர் களின் ஈடுபாட்டினால் அவர் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப் படவில்லை. ஆனால் ஒரு மாதத்திற்குள் வெளியேற வேண்டும் என்று கட்டா யப்படுத்தப்பட்டது.

லண்டனில் அவரை வழி மறிக்கக் கூடிய வழிகள் ஆராயப்பட்டாலும் அங்கி ருந்து வந்த கருத்து வேற்றுமைகளால் அது தொடங் காது அவர் பிரான்ஸிற்கு பாரிஸில் அவரது ஆதரவா



ளர்களின் அரவணைப்பில் சென்றார். அங்கு அக திக் கோரிக்கை தருமாறு ஒரு சாரார் வற்புறுத்தினர். இன்னொரு சாரார் அதை விரும்பவில்லை. அவர் ஆயுதப் போராட்டத்தில் இருந்து நேரடியாக வராத போதிலும் வன்முறையில் நம்பிக்கை வைத்திருந் தமையால் அகதி அந்தஸ்து வழங்கப்படமாட்டாது என்பதில் பலர் அக்கறை கொண் டிருந்தனர்.

ஆனால் பாரிஸில் அந்த நாள்களில் லெபனான் நாட்டில் உள்நாட்டு பிரச்சினைகளில் ஆயுதம் தாங்கிப் போரிட்ட ஒரு கிறிஸ்தவ குழுவின் இராணுவ தளபதி அவன் (Auon) என்பவரின் அகதி கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவருக்கு உதவி செய்த சட்டத் தரணிகளையும் அரசியல்வாதிகளையும் அணுகி இவை பற்றி ஆராயப்பட்டாலும் இந்த அணுகுமுறை களில் நிலவிய வேற்றுமைகளும் கருத்து நிலைப்பாடு களும் கிட்டுவுக்கு ஊக்கத்தை கொடுக்கவில்லை.

**137. அவர் அகதிக் கோரிக்கையைக் கொடுத்தாரா?**

இந்த வாதப்பிரதிவாதங்கள் நடந்து கொண்டிருந்த போது அவர் தனக்கு கிடைத்த விசாவினைப் புதுப் பித் துக் கொள்வதற்கு மாறி மாறி சில கிழக்கு ஐரோப் பிய நாடுகளுக்குச் சென்று வந்தார். அவர்களின் உத வியுடன் சில நடவடிக்கைகளை ஏற்படுத்த முயற்சி செய்யப்பட்டன. மெக்ஸிகோ கூட போய் வந்தார். ஆயினும் கடைசியாக திரும்புவதென்ற முடிவில் மலேசியா அடைந்து, அவர்களுடைய கப்பலில் ஆயுதங்களுடன் தமிழீழப் பிரதேசம் நோக்கிப் பய ணித்தார். அந்த பயணத்தில் வீர மரணம் எய்தினார். அவரோடு அவர் நினைத்து வைத்திருந்த எல்லா மாற்று திட்டங்களும் கடலோடு சங்கமித்தன.

ஒரு வேளை கிட்டு பிரான்ஸிலோ,பிரித்தானியா விலோ அகதிக் கோரிக்கையை முன்வைத்து, அது நிராகரிக்கப்பட்ட், வழக்குகள் தொடுக்கப்பட்டு, அது நிறைவடையும் காலங்கள் வரை அவர் அங்கிருந்து பணியாற்றி, தன்னுடைய ஆளுமையில் பல மாற் றங்களைக் கொண்டு வந்திருக்கலாம் என்ற அங்க லாய்ப்பு உண்டு.

ஆனால் அமைப்புக்களின் அதிகாரப் போட்டிகள், அவற்றின் தாக்கங்கள் நாம் புரிந்து கொள்ள முடியா தவை. ஆனால் அவரோடு இணைந்து செயற்பட்ட புத்திஜீவிகள் பலர் – சத்தியேந்திரா உட்பட – தங்கள் ஈடுபாடுகளைக் குறைத்துக் கொண்டார்கள்.

(வளரும்...)

# கறுப்பு பணத்தை கடன் வாங்க இலங்கை கட்டாயப்படுத்தப்படும்

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு



இலங்கையின் பொருளாதாரம் தொடர்பான உண்மையை வெளிப்படுத்தியமைக்காக அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும், நாட்டின் வங்கித் துறை நெருக்கடியில் இருப்பதாக அவர் வெளிப்படையாகக் கூறியுள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிக்கப்படாவிட்டால் வங்கித் துறை நெருக்கடிக்கு செல்லும் என்று அமைச்சர் கம்மன்பில வெளிப்படையாகக் கூறியிருந்தார். உண்மையை பேசிய தற்காக அவருக்கு நன்றி கூறவேண்டும் என்று ஹர்ஷ டி சில்வா செய்தியாளர் சந்திப்பின் போது கூறினார்.

வங்கிகளுக்கு இடையிலான பண்டமாற்று காரணமாக வங்கித் துறை நெருக்கடி நிலையில் உள்ளது.

ஒரு டொலரை 199 ரூபா 90 சதத்துக்கு அரச வங்கி ஒன்று மற்றும் ஓர் அரச வங்கியிடம் இருந்து கொள்வனவு செய்தால், டொலர்களைக் குறைந்த விகிதத்தில் விற்பனை செய்வதற்கு மற்ற வங்கியுடன் உடன்படிக்கை செய்து கொள்கிறது.

கடந்த இரண்டு மாதங்களில் 500 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள இடைப்பட்ட வங்கி பண்டமாற்றுகள் நிகழ்ந்துள்ளன என்று அவர் கூறினார்.

இது தவிர, உயர்மட்ட அரச அதிகாரி ஒருவர் இலங்கை விரைவில் கோரப்படாத கடன்களுக்கு செல்ல நிர்பந்திக்கப்படும் என்று கூறியுள்ளார்.

இதன் பொருள் சில தரப்புகள் மற்றும் நாடுகளிடமிருந்து குறைந்த வட்டி விகிதத்தில் கறுப்புப் பணத்தை கடன் வாங்க இலங்கை கட்டாயப் படுத்தப்படும் என்று அவர் ஹர்ஷ தெரிவித்தார்.

இந்தநிலையில் அரச அதிகாரிகள் நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக சரியான விளக்கத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்குவது முக்கியம். இல்லையென்றால், உண்மையைக் கண்டறிய அவர் உளவுத்துறை அதிகாரிகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்ப வேண்டியிருக்கும் என்று தமது கட்சி நம்புவதால், நெருக்கடியைத் தீர்க்க, மக்கள் நட்பு கட்சி என்ற வகையில், அரசாங்கத்துக்கு உதவ தாம் தயாராக இருப்பதாக ஹர்ஷ தெரிவித்தார்.

அரசாங்கத்தால் பொருளாதாரத்தை கையாள முடியாவிட்டால், அது நிர்வாகத்தை திறமையான கைகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

# வாக்காளர் பட்டியல் மீளாய்வு யாழ். மாவட்டத்தில் ஆரம்பம்




2021 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் மீளாய்வு நேற்று (திங்கட்கிழமை) யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆரம்பமாகியுள்ளது.

இம்முறை வழமை போன்று கிராம அலுவலர்கள் வீடு வீடாக 'பிசி' படிவம் விநியோகிக்க மாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொவிட் பெருந்தொற்றுக் காரணமாக வீடு வீடாக 'பிசி' படிவம் விநியோகித்து வாக்காளர் பெயர்ப்பட்டியல் மீளாய்வை இம்முறை தேர்தல்கள் ஆணைக்குழு கைவிட்டுள்ளது.

அதற்குப் பதிலாக வாக்காளர் பெயர்ப் பட்டியலில் புதிதாகத் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டியோர், பெயர்ப்பட்டியலில் பெயர் நீக்கப்பட வேண்டியவர்கள் தொடர்பான தகவல்களை மாத்திரம் பெற்றுக்கொண்டு மீளாய்வு செய்யத் திட்டமிட்டுள்ளது.

18 வயதைக் கடந்தவர்கள் மற்றும் உயிரிழந்தோர் விவரங்களை நீக்க உள்ள குடும்பங்கள் கிராம அலுவலரைத் தொடர்புகொண்டு படிவத்தைப் பெற்று பூர்த்திசெய்து ஒப்படைக்க வேண்டும்.

இதற்குரிய படிவம் கிராம அலுவலர் அலுவலகம், பிரதேச செயலகம் மற்றும் தேர்தல்கள் திணைக்களத்தில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தம்பலகாமத்தில் கைக்குண்டு மீட்பு

திருகோணமலை – தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தினிபுரம் பகுதியில் கைக்குண்டொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



தம்பலகாமம் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

கைக்குண்டு கடந்த யுத்த காலங்களின் போது தமிழீழ விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்டதா அல்லது வேறு யாருக்காவது சொந்தமானதா என்பது பற்றிய விவரங்கள் இன்னும் வெளிவரவில்லை.

ஆனாலும் குண்டை செயலிழக்கச் செய்வதற்காகத் திருகோணமலை நீதிமன்றில் கட்டளை ஒன்றைப் பெற உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தொற்றுநோய் பிரிவு தலைவர் பதவிநீக்கம் கருத்துத் தெரிவிக்க மறுத்தார் பவித்திரா

தொற்றுநோயியல் பிரிவுத் தலைவர், பதவியில் இருந்து நீக்கப்பட்டமை தொடர்பில், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார்.

தொற்றுநோயியல் தலைமை நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர நீக்கப்பட்டமை தொடர்பாக, செய்தியாளர்கள் கேட்டபோது, அமைச்சர் பவித்ரா எவ்வித பதிலும் அளிக்காமல் சென்றுவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே, கொவிட் - 19 இறப்புகள் தொடர்பாகத் தகவல்கள் பொறுப்பற்ற முறையில் வெளியிடப்பட்டுள்ளன என்று கூறினார்.

கொவிட் - 19 புள்ளிவிவரங்களை அறிந்த பின்னரே அரசாங்கம் முடிவுகளை எடுக்கிறது என்று அவர் சுட்டிக் காட்டினார்.

தரவை வெளியிடுவதில் பொறுப்பற்றவராக இருக்கின்றமை கடுமையான குற்றமாகும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில், துல்லியமற்ற கொவிட் - 19 புள்ளிவிவரங்களை வெளியிடுவதற்கான நடவடிக்கைக்குப் பின்னால் ஒரு சதி இருக்கிறதா என்று கேட்டபோது, அது ஒரு சதி என்று நேரடியாக சொல்ல முடியாது என்று சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.



# டிப்பர் பாதையை விட்டு விலகி சம்மாந்துறையில் கோர விபத்து



சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிப்பள்ளி பிரதான வீதியில் மாவடிப்பள்ளி பாலத்திற்கு அருகில் செங்கல் ஏற்றிய டிப்பர் வாகனம் ஒன்று பாதையை விட்டு விலகி தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது காயங்களுக்கு உள்ளான நிலையில் டிப்பர் வாகனத்தின் சாரதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாவடிப்பள்ளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## உணவுப் பாதுகாப்பு நிலையில் கொவிட் – 19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கம்

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் தரவுகளின்படி, உலகளாவிய நோய்த்தொற்றுக்கு முன்னர் உலக சனத்தொகையில் 8.9 சதவீதமான அதாவது அண்ணளவாக 690மில்லியன் மக்கள் ஊட்டச்சத்துக் குறைபாடு கொண்டவர்களாக மதிப்பிடப்பட்டுள்ளனர். கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றானது உலகில் ஒட்டுமொத்த ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள சனத்தொகையினரில் 83 மில்லியன் தொடக்கம் 132 மில்லியன் தொகையான மக்களைச் சேர்க்குமென உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் ஆரம்ப மதிப்பீடு குறிக்கின்றது. உலகளாவிய நோய்த்தொற்றுக்கு முந்தைய தரவுகளின் அடிப்படையில், உணவின் கிடைப்பனவு, நியாயமான விலை மற்றும் தரம் மற்றும் உணவின் பாதுகாப்பு என்ற பரிமாணங்களைக் கருத்திற் கொண்டு 2019 இன் உலகளாவிய உணவுப் பாதுகாப்புக் குறியீட்டில் 113 நாடுகளில் இலங்கை 66ஆவது இடத்தைப் பிடித்திருந்தது.

அதேவேளை, குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாடு இலங்கையில் நீண்டகாலப்பிரச்சினையாக இருந்து வருகிறது. தொகைமதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட குடிவிபரவியல் மற்றும் சுகாதாரக் கணக்கெடுப்பு - 2016 இன் அடிப்படையில் 5 வயது அல்லது அதற்குக் குறைவான குழந்தைகளிடையே வளர்ச்சி குன்றல், உடல் உருக்கம் மற்றும் குறைந்த நிறை முறையே 17.3 சதவீதம், 15.1 சதவீதம் மற்றும் 20.5 சதவீதமாகக் காணப்பட்டது.

உலகளாவிய ரீதியாகவும் உள்நாட்டிலும் மேற்கொள்ளப்பட்ட முடக்கல் மற்றும் நகர்வு மீதான கட்டுப்பாடுகள் போன்ற முன்னெப்பொழுதுமில்லாத தடுப்பு நடவடிக்கைகளினால் உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் தடையற்ற உணவு உற்பத்தி மற்றும் விநியோகத்தை உறுதிப்படுத்த வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் சீர்குலைந்து வழங்கல் சங்கிலிகள் மற்றும் மக்களின் வாழ்வாதாரங்களில் தாக்கம் செலுத்தியமையால் அது உணவுப் பாதுகாப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

கொவிட் - 19 உலகளாவிய தொற்றுநோயின் போது ஏற்பட்ட அனுபவங்கள் இதுபோன்ற முன்னெப்பொழுதுமில்லாத பொருளாதார அதிர்வுகளின்போது பொதுமக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன் இவ்வாறான பிரச்சினைகள் சரியான முறையில் தீர்க்கப்படாவிடின் நாட்டில் தற்போதுள்ள உணவுப் பாதுகாப்பின்மைபிரச்சினைகள் மேலும் மோசமடைய வாய்ப்புள்ளதென்பதையும் வலியுறுத்துகின்றன.

- தகவல் மூலம் மத்திய வங்கி அறிக்கை 2020

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# சீன பிரஜையுடன் போலி கடன் அட்டை மூலம் பண மோசடி செய்த இலங்கையர் மூவர் கைது

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவிப்பு



போலி கடன் அட்டையைப் பயன்படுத்தி பண மோசடி செய்த குற்றச்சாட்டு தொடர்பாக சீன பிரஜையுடன் மூன்று இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒன்லைனில் பொருள்கள் வழங்கும் நிறுவனம் அளித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண நேற்று (திங்கட்கிழமை) தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட நபர்கள் ஒன்லைன் மூலம் கடன் அட்டையைப் பயன்படுத்தி பொருள்களை முன்பதிவு செய்தனர் எனவும் பின்னர் கட்டணம் வசூலிக்கச் சென்றபோது அந்த அட்டைகளில் பணம் இல்லை எனத் தெரிய வந்ததாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

தொடர்ந்து சம்பந்தப்பட்ட நபர்கள் போலி கடன் அட்டைகளைத் தயாரிப்பது விசாரணையில் தெரிய வந்த நிலையில், அவர்களிடம் இருந்து சுமார் 30 போலி கடன் அட்டைகள் கைப்பற்றப்பட்டன எனவும் அஜித் றோஹண தெரிவித்தார்.

மேலும் ஒன்லைன் மூலம் பெறப்பட்ட பொருள்கள் சம்பந்தப்பட்ட நபர்களால் மறுவிற்பனை செய்யப்பட்டமையும் விசாரணைகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் சந்தேக நபர்கள் இரண்டு நாள்களுக்குள் 7 லட்சத்து 87 ஆயிரம் ரூபா மோசடி செய்தனர் எனவும் சந்தேக நபர்கள் கண்டி, வரக்காபொல மற்றும் கல்கிசையில் வசிப்பவர்கள் என்றும் அஜித் றோஹண தெரிவித்தார்.

# சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வவுனியா வைத்தியசாலைக்கு களவிஜயம்





வவுனியா, ஜூன் 22

வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலையில் 35 மில்லியன் ரூபா பெறுமதியான பி.சி.ஆர் ஆய்வு கூடத்தொகுதி ஒன்றை விரைவில் அமைப்பதற்கான முன்னேற்பாடுகளை ஆராயும் நோக்குடன் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சுதத் தர்மரட்ண கள விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

வவுனியா மாவட்டத்தில் பெற்றுக்கொள்ளப்படும் பி.சி.ஆர் மாதிரிகள் யாழ் போதனா வைத்தியசாலை மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இதனால் காலதாமதம் உட்பட பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. இந்நிலையில் வவுனியா வைத்தியசாலைக்கு பி.சி.ஆர் ஆய்வு கூடத்தொகுதி ஒன்றை வழங்குமாறு வவுனியா வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் பல்வேறு தரப்பினர்களாலும் தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்தன.

அதனடிப்படையில் வவுனியா வைத்தியசாலைக்கு விஜயம் செய்த சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் சுதத் தர்மரட்ண(ஆய்வுக்கூடம்) வவுனியா வைத்தியசாலையில் 35 மில்லியன் ரூபா பெறுமதியான பி.சி.ஆர் ஆய்வு கூட தொகுதியை இயக்குவதற்கான முன்னேற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்திருந்தார்.

குறித்த செயற்பாட்டுக்கு வவுனியா வைத்தியசாலையின் ஒத்துழைப்புக்கள் தொடர்பாகத் திருப்தியடைந்த அவர், விரைவில் ஆய்வுக்கூடத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையையும் எடுக்கவுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை வவுனியா வைத்தியசாலையில் அமைந்துள்ள கொவிட் - 19 விடுதியைப் பார்வையிட்ட அவர், கொவிட் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக வவுனியா வைத்தியசாலை நிர்வாகத்துக்குத் தனது பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பிராந்தியத்தின் கொவிட் - 19 நோய்நிலைமை மற்றும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள், பி.சி.ஆர் பரிசோதனைகளின் அதிகரிப்பு தொடர்பாக வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் ராகுலனால் பிரதிப்பணிப்பாளருக்குத் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

குறித்த நிகழ்வில் வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் க. ராகுலன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் க, மகேந்திரன் மற்றும் சுகாதார சேவைகள் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வவுனியா வைத்தியசாலையில் பி.சி.ஆர் பரிசோதனை ஆய்வுகூடம் இயங்கும் பட்சத்தில் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த மக்களின் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் தாமதமின்றி மிகவிரைவாக அறிந்துகொள்ளும் நிலைமை ஏற்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.



# மீன்களை விற்கமுடியாமல் திண்டாடும் வியாபாரிகள்

கிழக்கு கடற்கரையிலும் ஆமைகளும், டொல்பினும் இறந்த நிலையில் கரை ஒதுங்குகின்றமையால் மீனவர்கள் கடல் மீன்களை விற்க முடியாமல் திண்டாடுகின்றனர் எனக் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மீனவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

கடற்பகுதியில் சிலரால் மேற்கொள்ளப்படும் சுருக்கு வலை மீன்பிடிக்கு மத்தியில், தற்போதைய கொவிட் தாக்கத்தால் நாடு முடக்கப்பட்டுள்ள இந்நிலையில் அன்றாடம் செய்துவரும் மீன்பிடித் தொழிலில் பெரும் பாதிப்பை எதிர்கொண்டு வருகிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமது கடற்பிராந்தியத்தில் கடல் ஆமைகளும், டொல்பினும் இறந்த நிலையில் கரை ஒதுங்கி வருகின்றமையால் பெரிதும் மேலும் பாதிப்படைந்துள்ளதாக களுதாவளை, கல்லாறு, களுவாஞ்சிகுடி, உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பல வருடங்களாக இவ்வாறு கட லில் தொழில் செய்து வரும் இந்நிலையில் இவ்வாறு கடல் வாழ் உயிரினங்கள் இறந்து கரை ஒதுங்கியதில்லை.

இது தென்மேற்கு கடற் பிராந்தியத்தில் அண்மையில் தீப்பற்றி எரிந்த என்.ரி.எக்ஸ் பிறஸ் பேர்ள் கப்பலிலிருந்து கடலில் கலந்துள்ள பொருள்களை கடல் வாழ் உயிரினங்கள் உண்டதால் தான் இவ்வாறு அந்த உயிரினங்கள் இறந்து கரை ஒதுங்குகின்றனவோ என எண்ணத் தோன்றுகின்றது.

இருந்தபோதிலும் துறைசார்ந்த அதிகாரிகளும், அரசாங்கமும் மக்கள் கடல் உணவுகளை உண்ணலாமா? உண்ண முடியாதா என்பதை உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும்.

ஏனெனில் கடலில் பிடிபடும் சொற்ப மீன்களைக் கூட நாம் விற்பனை செய்ய முடியாதுள்ளோம், மக்கள் கொள்வனவு செய்வதற்கு அச்சமடைகின்றார்கள் என அப்பகுதி மீனவர்களும், மீன் வியாபாரிகளும், அங்கலாய்க்கின்றனர்.

# சுகாதார விதிமுறைகளை மீறி வியாபாரம் செய்தால் பதினான்கு நாள்களுக்கு சீல்

## கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் தீர்மானம்

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வர்த்தக நிலையங்களில் சுகாதார விதிமுறைகளை மீறி வியாபாரம் இடம்பெற்றால் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வியாபார நிலையத்திற்கு பதினான்கு நாள்களுக்கு சீல் வைக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாடளாவிய ரீதியில் அமுலில் காணப்பட்ட பயணத்தடை நேற்று திங்கட்கிழமை நீக்கப்பட்ட நிலையில் கோறளைப் பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் மக்கள் பாதுகாப்பு கருதி விசேட கூட்டம் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வர்த்தக நிலையங்கள் பயணத்தடை தளர்த்தப்பட்ட நிலையில் மாலை 6 மணி வரை திறந்து வியாபாரம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், சுகாதார விதிமுறைகளை மீறி வியாபார நடவடிக்கை இடம்பெற்றால் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வியாபார நிலையத்துக்கு பதினான்கு நாள்களுக்கு சீல் வைக்கப்படும்.

சிகையலங்கார நிலையம், உணவகங்கள் தவிர்ந்த வியாபார நிலையங்கள் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், உணவகங்களுக்கு உணவுகளை விநியோகம் செய்ய மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார வைத்திய அலுவலகத்தால் நடமாடும் பி.சி.ஆர். பரிசோதனை குழாம் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டு சுகாதார விதிமுறைகளை மீறுவோருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பள்ளிவாசல்கள், வாழைச்சேனை பிரதேச சபை மற்றும் வர்த்தக சங்கத்தால் மக்களுக்கு தெளிவூட்டும் வகையில் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் வழங்கல். மக்களின் நடமாட்டம் அதிகாரித்துக் காணப்படும் இடங்களைக் கண்காணிக்கும் வகையில் ட்ரோன் கமெரா மூலம் வீடியோ பதிவு செய்வதற்கு பொலிஸார் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதுடன், கிராம மட்ட குழுக்கள் பொலிஸாருடன் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

திருமணம், பொது நிகழ்வுகள், ஒன்றுகூடல், விளையாட்டு நிகழ்வுகள் என்பவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மரணம் ஒன்று இடம்பெறும் பட்சத்தில் சுகாதாரத் தரப்பினரின் பரிசோதனைகள் இடம்பெற்று அதன் முடிவுகள் பெற்ற பின்னர் மரண வீட்டுக்கு சுகாதார விதிமுறைகளைப் பேணி மக்கள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களை வாங்குபவர்கள் அருகிலுள்ள வியாபார நிலையத்துக்குச் செல்வதாயின் நடந்து சென்று பொருள்களைக் கொள்வனவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

வியாபாரிகள் நிர்ணய விலையை காட்சிப்படுத்துவதுடன், அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்யும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# பதவி துறக்க அதுரலிய ரத்ன தேரர் மறுப்பு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்



தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறக்க அதுரலிய ரத்ன தேரர் மறுத்துள்ள நிலையில் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க எங்கள் மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற மூன்று மாதங்களுக்குப் பின்னர் தனது உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வார் என்ற கட்சி ஒப்பந்தத்தின்படி, அவரைப் பதவியில் இருந்து இராஜினாமா செய்யுமாறு கட்சி கோரியது.

இருப்பினும் அப்படியான எந்தவோர் உடன்படிக்கையும் இல்லை எனத் தெரிவித்து அதுரலிய ரத்ன தேரர் பதவியைத் துறக்க மறுப்பு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள எங்கள் மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் சுசந்த கொடித்துவக்கு, நாடாளுமன்றத்தில் ரத்ன தேரரின் நடத்தை தொடர்பாகக் கட்சி மிகவும் ஏமாற்றமடைந்துள்ளதாகக் கூறினார்.

குறிப்பாக கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிக்க முடிவு செய்திருந்போதும் அவர் அந்த சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இதேபோலவே எரிபொருள் விலை உயர்வு சர்ச்சையை எடுத்து எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில சம்பந்தப்பட்ட, கட்சியின் நிலைப்பாட்டுக்கு மாறாக ரத்ன தேரர் செயற்பட்டார் என்றும் சுசந்த கொடித்துவக்கு குறிப்பிட்டார்.

ஞானசார தேரரை நாடாளுமன்றத்திற்குள் நுழைய அனுமதிக்க நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகுமாறு தனிப்பட்ட முறையில் வேண்டுகோள் விடுத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும் கட்சியைச் சேர்ந்த எவரும் தன்னை அழைக்கவில்லை என்றும் இது தொடர்பாக தனக்கு ஒரு கடிதமம் அனுப்பவில்லை என்றும் அதுரலிய ரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளார்.

# பேர்ள் கப்பல் தீ விபத்தால் சுற்றாடலுக்கு பெரும் பாதிப்பு

## என்கிறது ஐ.நா.



கடற்பகுதியில் தீ விபத்துக்குஉள்ளானஎக்ஸ்–ப்ரெஸ் பேர்ல் கப்பலில் காணப்பட்ட இரசாயனங்கள் சுற்றாடலுக்கு கணிசமான சேதத்தை ஏற்படுத்தியுள்ளனஎனஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹேனா சிங்கர் இந்த விடயம் தொடர்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், கப்பலால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைக் கணக்கிட்டு அதிலிருந்து மீள்வதற்கும் சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய பேரழிவைத் தடுப்பதற்கும் ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு உதவும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எக்ஸ் ப்ரஸ் பேர்ல் கப்பலில் ஏற்பட்ட தீப்பரவலால் கடற்சூழலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பாக ஆராய்வதற்காக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் வேலைத்திட்டத்தின் நிபுணர்கள் தொடர்ச்சியாக கடற்கரையில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மணல் ஏற்றிச் சென்ற வாகனத்தின் மீது கிளிநொச்சியில் இராணுவம் துப்பாக்கிசூடு

கிளிநொச்சி – புளியம்பொக்கணை, நாகேந்திரபுரம் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் ரக வாகனம் மீது படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சாரதியின் உதவியாளர், கண்ணாடி துவள்களால் காயம் அடைந்த நிலையில் தருமபுரம் பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

சட்டவிரோத மணல் அகழ் வைக் கட்டுப்படுத்துவதற்காக நாகேந்திரபுரம் பகுதியில் சோதனைச் சாவடியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்த சோதனைச் சாவடி வழியாக மணல் ஏற்றிய படி வந்த குறித்த வாகனத்தை நிறுத்துமாறு



தெரிவித்ததாகவும் ஆனாலும் அவர்கள், வாகனத்தை நிறுத்தாமல் பயணித்தமையால். துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வாகன சாரதி கூறியுள்ளவை வருமாறு –

நாம் மணல் ஏற்றுவதற்கான அனுமதியுடனேயே பயணித்தோம். இருப்பினும் இராணுவத்தினர் எம்மை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பெரியகல்லாறு பகுதிகளில் தொற்றாளர்கள் அதிகரிப்பு

## பொதுச்சுகாதார பரிசோதகர்கள்

மட்டக்களப்பு – பெரியகல்லாறு பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக அண்மையில் பெரியகல்லாறு பகுதியின் 2ஆம், 3ஆம் கிராம சேவையாளர் பிரிவுகள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டன.

ஆனாலும் குறித்த பகுதியில் அதிகளவான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் எனப் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.


குறிப்பாக பெரியகல்லாறு 3 ஆம் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள இரண்டு இடங்களில் இடம்பெற்ற மரண வீட்டுக்கு சென்று வந்தவர்களில் அதிகளவானோரேவைரஸ்தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்நிலையில்கடந்த ஞாயிற்றுக் கிழமை குறித்த பகுதியில் 113 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 14பேர், வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆகவே முடக்கப்பட்டுள்ள இந்த பகுதியிலுள்ளஅனைத்து மக்களுக்கும் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார துறையினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதிகளில் இதுவரை 94 பேர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிதைவடைந்த நிலையில் டொல்பின் யாழ்.கடற்கரையில் கரையொதுக்கம்



யாழ்ப்பாணம் – வேலணை, துறையூர் கடற்கரையில் உயிரிழந்த நிலையில் டொல்பின் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கரையொதுங்கிய குறித்த டொல்பினின் உடல், சிதைவடைந்த நிலைமையில் காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் உடற்கூற்று பரிசோதனைக்காக, டொல்பினை எடுத்து சென்றுள்ளன என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு கடற்பரப்பில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட பின்னர் இலங்கையிலுள்ள பெரும்பாலான கடற்பகுதிகளில் கடல் உயிரினங்கள் உயிரிழந்த நிலையில் தொடர்ச்சியாக கரையொதுங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# ராஜாபிளாஸா வீட்டுத்திட்ட மக்களுக்கு தமிழரசுக் கட்சியால் உலருணவுப் பொதி

**ந.லோகதயளன்.**

யாழ்ப்பாணம், ஜூன் 22

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் உள்ள ராஜா பிளாஸாவால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் அனைவருக்கும் தமிழ் அரசுக் கட்சியால் நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.



உடுவில் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள குறித்த கிராமத்தில் உள்ள 30 வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் அனைவருக்குமே இந்த நிவாரணப்பொதி வழங்கப் பட்டது.

யாழ். நகரில் உள்ள மதர்கெயார் வைத்தியசாலையின் நிதிப் பங்களிப்பில் தமிழ் அரசுக் கட்சியால் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்படி கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் இந்த உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கொரோனாக் காலத்தில் உள்ள பயணத் தடையால் நாளாந்த வருமானம் மிகவும் பாதித்த இந்தக் கிராமத்துக்கு இதுவரை எந்த உதவியும் கிடைக்கவில்லை என விடுத்த வேண்டுகோளின் பெயரில் இந்த உதவி வழங்கப்பட்டது.

# இளவாலையில் திருட்டு சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம் – இளவாலை பகுதிகளில் மூன்று வீடுகளில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்த சந்தேகநபரிடமிருந்து 5 கிராம் ஹெரோயின் உட்பட்ட அந்த வீடுகளில் திருடப்பட்ட பொருள்கள் ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் சில்லாலையைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டார். மேலும் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரிடம், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



# பொருளாதார மத்திய நிலையங்கள் நேற்று முதல் திறக்கப்பட்டன

இலங்கையில் பயணக்கட்டுப்பாடுதளர்த்தப்படுகின்ற நிலையில் பொருளாதார மத்திய நிலையங்களும் இன்று முதல் திறக்கப்பட்டன.

இதனடிப்படையில் தம்புள்ளை, தம்புத்தேகம, நாரஹேன்பிட்டி, கெப்பிட்டிபொல, இரத்மலானை உள்ளிட்ட பொருளாதார மத்திய நிலையங்கள் சுகாதார வழிகாட்டல்களுடன் திறக்கப்பட்டன.


சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய வர்த்தக நடவடிக்கைகளும் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021


**தரம் - 7** | **கணிதம்** | **அலகு 11**

**தசமங்கள்**

$0.1 = \frac{1}{10}$



0 2145 இனை எண்சட்டத்தில் குறித்தல்




01.பின்வரும் ஒவ்வொரு தசமங்களை எண்சட்டத்தில் குறித்து காட்டுக?

1) 0.9
2) 0.75
3) 0.008

| 02. பின்னங்கள் | தசமங்கள் |
|---|---|
| 1) $\frac{4}{1000}$ | 0.004 |
| 2) $\frac{26}{100}$ | .............. |
| 3) $\frac{4}{10}$ | .............. |
| 4) $\frac{97}{1000}$ | .............. |
| 5) $\frac{751}{1000}$ | .............. |
| 6) $\frac{9}{1000}$ | .............. |

03.பகுதி எண் பத்தின் வலுவாக அல்லாத முறைமைப் பின்னங்களை தசம எண் களாக எழுதுதல்.

உ+ம் -

(1) $\frac{1}{2} = \frac{1\times5}{2\times5} = \frac{5}{10} = 0.5$

(2) $\frac{1}{4} = \frac{1\times25}{4\times25} = \frac{25}{100} = 0.25$

(3) $\frac{1}{5}$ = ..............

(4) $\frac{13}{125}$ = ..............

(5) $\frac{77}{125}$ = ..............

04.கலப்பு எண்களை தசம எண்களாக எழுதுதல்

உ+ம் (1) $2\frac{1}{20} = 2 + \frac{1}{20} = 2 + \frac{1\times5}{20\times5} = 2 + \frac{5}{100} = 2+0.05 = 2.05$

உ+ம் (2) $3\frac{3}{5} = 3 + \frac{3\times20}{5\times20} = 3 + \frac{60}{100} = 3+0.6 = 3.6$

1) $1\frac{2}{5}$
2) $2\frac{7}{50}$
3) $4\frac{1}{8}$
4) $1\frac{1}{250}$
5) $1\frac{3}{10}$

| 05.தசம எண் | பின்னம் |
|---|---|
| 1. 0.7 | $\frac{7}{10}$ |
| 2. 0.23 | ................. |
| 3. 0.02 | ................. |
| 4. 1.3 | ................. |
| 5. 8.16 | ................. |

6. தசம எண்ணொன்றை 10ஆல்,100ஆல்,1000ஆல் பெருக்குதல்

1. 37.16 x 10 = 371.6
2. 23.65 x 100 = 2365
3. 4.74 x 10 = .......................
4. 5.379 x 100 = .......................
5. 0.07 x 100 = .................
6. 0.079 x 10 = ................
7. 6.0051 x 1000 = .............
8. 32.6.x10 = ...........

7.தசம எண்ணொன்றை 10ஆல்,100ஆல்,1000ஆல் வகுத்தல்

1. 145.56 ÷ 100 = 1.4556
2. 19.23 ÷ 10 = 1.923
3. 7871.8 ÷ 10 =.......................
4. 169.51 ÷ 100 =..........................
5. 9.53 ÷ 100 =..........................
6. 169.51 ÷ 1000 =..........................
7. 7871.8 ÷ 1000 =........................

8. தசம எண்களை முழு எண் ஒன்றினால் வகுத்தல்

1. 84.6÷2 = 42.3

```
   42.3
2 |84.6
   8
   04
    4
   06
    6
    0
```

2. 54.6 ÷3

3. 167.2÷4

ப.லாவண்யா
உள்ளகப்பயிற்சி, யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.
வழிகாட்டலும் ஆலாசனையும் :- திருமதி கம்சானந்தி முகுந்தன்
( விரிவுரையாளர் யாழ்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.

## நேற்றைய வினாக்களுக்கான விடைகள்

**தரம் - 07** | **பின்னங்கள்** | **கணிதம் அலகு 10**

01. $\frac{2}{5}, \frac{1}{9}, \frac{6}{10}, \frac{4}{9}, \frac{1}{100}$

02.
1. $\frac{5}{8}$
2. $\frac{1}{7}$
3. $\frac{3}{4}$
4. $\frac{3}{4}$

03.
1. $>$
2. $=$
3. $<$
4. $<, =$

04. ராஜா

05.
1. $\frac{50}{7}$
2. $\frac{17}{2}$
3. $\frac{83}{4}$
4. $\frac{100}{3}$

06.
1. $2\frac{6}{20}$
2. $2\frac{1}{4}$
3. $4\frac{2}{4}$
4. $2\frac{7}{9}$

07.

3. $2\frac{1}{4} + 1\frac{3}{4} = \frac{9}{4} + \frac{7}{4} = \frac{9+7}{4} = \frac{16}{4} = 4$

4. $\frac{3}{20} + \frac{7}{30} = \frac{3\times3}{20\times3} + \frac{7\times2}{30\times2} = \frac{9}{60} + \frac{14}{60} = \frac{9+14}{60} = \frac{23}{60}$

5. $4\frac{2}{3} + 2\frac{1}{3} = \frac{14}{3} + \frac{7}{3} = \frac{21}{3} = 7$

6. $2\frac{2}{5} + 1\frac{1}{2} + 3\frac{7}{10} = \frac{12}{5} + \frac{3}{2} + \frac{37}{10} = \frac{12\times2}{5\times2} + \frac{3\times5}{2\times5} + \frac{37}{10} = \frac{24}{10} + \frac{15}{10} + \frac{37}{10} = \frac{24+15+37}{10} = \frac{76}{10} = 7\frac{6}{10}$

ப.லாவண்யா
உள்ளகப்பயிற்சி, யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.
வழிகாட்டலும் ஆலாசனையும் :- திருமதி கம்சானந்தி முகுந்தன்
( விரிவுரையாளர் யாழ்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

காலைக்கதிர்
Kalaikkathir

# கொரோனாவுக்கு எதிரான போராட்டம்



## ஓர் அனுபவத் தொடர்

அங்கம் 4

எந்திரி நவரட்னம் சுதாகரன்
பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர்,
முல்லைத்தீவு பிராந்தியம்.

### இலங்கையில் கொவிட் - 19 நோய்த் தொற்றின் மூன்றாம் அலை

கொவிட் – 19 இன் மூன்றாவது அலையாக 2021 புத்தாண்டு காலப்பகுதியுடன் மீண்டும் வலுவுற்று திகழ்ந்தது. நாட்டில் கோவிட் தொற்றின் பரவல் மிக வேகமாக அதிகரித்துக்கொண்டிருந்ததுடன் இறப்பு வீதமும் அதிகரித்த வண்ணம் காணப்பட்டது. சுகாதார துறையினர் தொடர்ச்சியாக எச்சரிக்கைகளினை வழங்கிக்கொண்டிருந்தனர். எனினும் என்னால் திட்டமிடப்பட்டவாறு அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்ளக்கூடியதாகவே காணப்பட்டது.

தொடர்ந்து 2020/2021 ஆம் ஆண்டுக்கான பெரும்போக நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டவாறு அறுவடையை எதிர்கொண்டிருந்தது. விவசாயிகள் நற்பலனை பெற்று நன்றிகளை தெரிவித்தனர். இந்த இக்கட்டான நிலையிலும் மனதுக்கு நெகிழ்ச்சிகரமான நிகழ்வுகள் ஏற்பட்ட வண்ணம்தான் இருந்தன. 2021 ஆம் ஆண்டுக்கான முன்மொழியப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அனுமதிக்கப்பட்டு அவற்றை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை பெரும் ஆவலாகத் தொடர்ந்தோம். புதிய திட்டங்கள், புதிய செயற்பாடுகள், புதிய தோற்றங்கள் என மிகவும் சுவாரஸ்யமாக பயணித்துக் கொண்டிருந்தேன்.

இதற்கிடையில் 2021 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நடவடிக்கைகளும் ஆரம்பமாகின. கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் கமக்கார அமைப்புகள், திணைக்கள அதிகாரிகள், மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் என அரச மற்றும் அரசசார்பற்ற திணைக்கள பங்களிப்புகளுடன் சிறுபோக நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டு சிறப்பாக ஆரம்பிக்கப்பட்டன.

திணைக்கள வேலை முன்னேற்றங்கள் தொடர்பான மீளாய்வுகள், அபிவிருத்திக் கூட்டங்கள், பிற திணைக்கள வேலைத்திட்டங்கள், கலந்துரையாடல்கள், விளையாட்டு நடவடிக்கைகள், கழக மற்றும் அமைப்புகளின் செயற்பாடுகள், ஆலய புனரமைப்பு என அனைத்திலும் பங்குகொண்டமையுடன் சிறந்த வேலைக் கட்டமைப்பை கொண்ட சுற்றுவட்டத்தினுள் இயங்கிக்கொண்டிருந்தேன்.

இந்த காலப்பகுதியில் கொரோனாவின் தாக்கம் துரித அளவில் அதிகரித்த நிலையில் சுகாதார துறையினரால் தொடர்ந்தும் எச்சரிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. பொதுப்போக்குவரத்து கட்டுப்பாடுகள், பணியாற்றும் அலுவலர்களுக்கான கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டமை, அலுவலகங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அலுவலர் பணியாற்றுகை போன்ற பாரிய நெருக்கடியான சூழ்நிலைக்கு மத்தியில் திணைக்களத்தினை சீராக நடாத்த வேண்டிய பெரும் பொறுப்பு இச்சந்தர்ப்பத்தில் எனக்கு காணப்பட்டது. எமக்கு கீழ் பணியாற்றும் அலுவலர்களின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை கொடுக்கப்படல் வேண்டும் என்பதில் நான் அதீத கவனம் செலுத்தியிருந்தேன்.

### நெருங்கிய உறவினரின் இழப்பு

திருகோணமலையில் வசிக்கும் எனது தாய் மாமனார் கடந்த 2021 ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி சுகவீனம் காரணமாக காலமானார். எனது சிறுவயது முதல் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்யும் வரையில் எம்மோடு ஒன்றாக இருந்து, அவரது அரவணைப்பில் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தமையுடன் எனது பல்கலைக்கழகக் கல்வி, எனது தொழில் என எல்லா வகையிலும் தனது ஊக்கத்தை அளித்து எமக்கு திறமையான ஒரு வழிகாட்டியாக இருந்தார். எமது குடும்பத்தின் முன்னேற்றத்தில் பெருமை கொள்ளும் ஒருவராகம் இருந்தார். நீண்ட நாள்களாக சுகவீனமாக இருந்தவர். யாழ்ப்பாணம் மற்றும் திருமலை போக்குவரத்து முன்னர் நடைபெற்று வந்தபோதும் தொடர்ச்சியான கொரோனா பெருந்தொற்று நெருக்கடி காரணமாக போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்ட நிலையில், உரிய விசேட வைத்திய வசதிகள் மேற்கொள்ள முடியாமையும் அவரின் இழப்புக்குக் காரணமாக இருந்தது. கொரோனோ எனும் கொடிய வைரஸ் நோய் எல்லோர் வாழ்விலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை இவரின் இழப்பு எமக்கு உணர்த்தியது.

போக்குவரத்து கட்டுப்பாடுகள், மாவட்டங்களுக்கிடையிலான பயணத்தடைகள் இருந்த நிலையிலும் அவரது இறுதிக்கடமையை நிறைவேற்ற அனுமதிக்கப்படுவோமோ இல்லையா என்ற நிலையிலும் மாமாவின் மரணச்சடங்கு நிகழ்வில் கலந்துகொள்வதற்காக நானும் எனது குடும்பத்தினரும் எமது தனிப்பட்ட வாகனத்தில் திருகோணமலை சென்றோம். அக்காலப்பகுதியில் திருகோணமலை மாவட்டம் கொரோனா வைரஸ் தாக்கத்தால் அதிகம் பாதிப்படைந்திருந்தது. குறிப்பாக சில பகுதிகள் முடக்கப்பட்ட நிலையிலும் இருந்தன. எனினும் எனது வாழ்வில் பல திருப்பங்களை ஏற்படுத்தி நான் இந்த நிலையில் இருப்பதற்கு துணைபுரிந்த



எனது மாமனாரின் இறுதி நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டும் என்ற மன உந்துதலை இறைவனது கருணையால் நிறைவேற்ற முடிந்திருந்தது. உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியே அவரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டிருந்த நாம், மிக மிக அவதானமாக அவரது 8 ஆம் நிகழ்வு நிறைவு பெறும் வரை அங்கிருந்து, எமது பிரத்தியேக வாகனத்திலேயே 30.04.2021 அன்று வீடு திரும்பினோம்.

கடந்த மே மாதம் 3ஆம் திகதி கடமைக்குச் சென்ற போது, நான் வேறு மாவட்டத்துக்குச் சென்று வந்ததன் அடிப்படையிலும் எனக்கு தெரியாமல் இந்த தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனும் முன்னெச்சரிக்கை உணர்வுடன், சுகாதார நடைமுறைகளினை பின்பற்றி அலுவலகத்தில் கடமையாற்றிய அதே வேளை ZOOM செயலி ஊடான கூட்டங்கள் மற்றும் பிரதம செயலாளரது கூட்டங்களில் அவர்களது முன்னனுமதியுடன் கலந்து கொண்டிருந்தேன்.



இந்நிலையில் கொரோனாவின் தாக்கம் மேலும் வலுப்பெற்று, அரசாங்கத்தால் மீண்டும் பொதுப் போக்குவரத்துக்கான பயணக்கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. திணைக்களங்கள் மிகக் குறைந் தளவு பணியாளருடன் செயற்பட அறிவுறுத்தப்பட்டன. கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. இப்புது வருட கொத்தணியுடன் அலுவலகம் மிகவும் பர பரப்படைந்தது பெரும் நெருக்கடியை சந்தித்தது. மீண்டும் வீட்டிலிருந்தான வேலை முறைமையை நோக்கி பயணித்தது. அதே வேளை அனைவரும் தத்தமது சுயபாதுகாப்பை தாங்களே உறுதி செய்யவேண்டிய நிலையும் காணப்பட்டது. கடந்த ஆண்டை விட மிகவும் நெருக்கடி நிலையாக காணப்பட்டது. மீளவும் பழைய நிலையை அதாவது கடந்த ஆண்டை (2020) போலவே செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் வேலைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட அதே வேளை அலுவலர்களது சுய பாதுகாப்பு மற்றும் நலனை கருத்தில் கொண்டு அவர்களுக்கு இலகுவாக வேலை செய்வதற்கான பொறிமுறை ஒன்றும் என்னால் ஏற்படுத்தப்பட்டு வழங்கப்பட்டது. அலுவலர்களது பாதுகாப்பை முன்னுரிமைப்படுத்தப்பட்டே எமது கடமைகளை நிறைவேற்றி வந்தோம்.

மேற்கூறிய முன்னெச்சரிக்கையுடனேயே கடந்த 2021 மே 07 ஆம் திகதி வரை நான் கடமையாற்றி வந்திருந்தேன். ஏற்கனவே நான் திருமலை சென்று வந்ததன் பின்னர் என்னிடம் நேரடியாக தொடுகையில் (Direct Touch) இருந்தவர்களுக்கு இன்றுவரை எந்த நோய் தொற்றும் ஏற்படவில்லை என்பது மிகவும் முக்கியமானதும் மகிழ்ச்சிக்குரியதுமாகும்.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் எனது சிறிய தாயார் (அன்ரி – எனது தாயாரின் தங்கை ) எம்முடன் திருகோணமலைக்கு பயணித்தவர் உடல் நலக்குறைவினால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 01.05.2021ம் திகதி அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்று அவர் வீடு திரும்பிய நிலை யில் அவரது உடல்நிலை மேலும் மோசமடைந்து காணப்பட்டமையினால் அவரை எனது தனிப்பட்ட வாகனத்தில் 07.05.2021 இல் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசென்று அனுமதித்திருந்தேன். அங்கு அவரது உடல்நிலை மற்றும் நோய் அறிகுறிகளினைக் கொண்டு அவருக்கு PCR பரிசோதனை மேற்கொண்டார்கள்.

(தொடரும்)



# மங்கலமாய் தங்கம்மா மனமெல்லாம் நிறைகின்றார்!

தங்கம்மா எங்களம்மா தமிழ்சைவம் காக்கவந்தார்
வெங்கலமாம் குரல்கொண்டு மிகுசைவம் உரைத்துநின்றார்
இங்கிதமாய் சங்கத்தமிழ் எங்குமே உவந்தளித்தார்
எங்களது தவப்பயனாக இப்புவியி லவர்பிறந்தார்

சிற்றின்பம் தனைத்துறந்தார் சிவமதனை மனம்நிறைத்தார்
பற்றுடைய ஆசைகளைப் பற்றாம லவரிருந்தார்
நற்கருணை மனங்கொண்டு நானிலத்தை அவர்பார்த்தார்
நற்றவத்தின் பயனாக நல்வரமாய் அவர்பிறந்தார்

தெல்லிப்பளைத் திருநகரை திருத்தலமாய் ஆக்கினார்
தேடிவந்து துர்க்கையம்மன் திருவடியைச் சரண்புகுந்தார்
நல்லவரைத் தொண்டினுக்காய் நயமுடனே அவரணைத்தார்
நலன்காக்க நானிலத்தில் பிறந்தாரே எங்களம்மா

பக்தியொடு பக்குவத்தை பலருள்ளும் விதைத்தாரே
பண்பாடி இன்னிசையால் பலகருத்தை மொழிந்தாரே
நித்தமுமே சத்தியத்தை நிலைநிறுத்த முயன்றாரே
நீள்பணியைச் சுமந்தபடி நெடும்பயணம் சென்றாரே

பலநாடு பலவமைப்பின் பாராட்டும் பெற்றாரே
பண்டிதராய் புலவராய் குருவெனவே திகழ்ந்தாரே
செந்தமிழைச் சிவத்தோடு சேர்த்தணைத்து நின்றாரே
சிவத்தமிழ்ச் செல்வியாய் செகம்போற்ற மிளிர்ந்தாரே

சிவஞான வித்தகராய் ஒளிபரப்பி நின்றாரே
திருவாசகக் கொண்டலாய் அவையேறி அமர்ந்தாரே
துர்க்கா துரந்தரியாய் தொண்டாற்றி உயர்ந்தாரே
தூய்மைநிறை மனத்தினராய் தெய்வத்திரு மகளானார்

அல்லற்பட்ட பெண்களுக்கு ஆறுதலாய் அவரிருந்தார்
அவரிருக்க இருப்பிடத்தை ஆரம்பித்தார் எங்களம்மா
தொடக்கிவைத்த பணியனைத்தும் தொலைதூரப் பார்வையுடன்
எடுத்தவரும் நின்றதனால் எல்லோரும் வாழ்த்துகிறார்

பெண்ணடியார் வரிசையிலே எங்களம்மா தங்கம்மா
மண்ணகத்தில் வரமெனவே வந்துநின்றார் மாவொளியாய்
இருளுறைந்த வாழ்க்கையிலே ஏற்றிவைத்தார் ஒளிவிளக்கை
அவ்விளக்கின் ஒளிபெருகி ஆறுகிறார் பலரிப்போ

துர்க்கையம்மன் தாழ்பணிந்து தொடக்கிவைத்த தொண்டிப்போ
பற்பலவாய் கிளைபரப்பி பயனளித்துச் செழிக்கிறது
தக்கபல துணைபெருக தன்வாழ்வை அர்ப்பணித்தார்
மக்களது நலன்நிறைத்த மங்கைநல்லா ளெங்களம்மா

தனிப்பெண்ணாய் எழுந்துநின்று தளர்வின்றிப் பணியாற்றி
சமுதாயம் சமயமென எண்ணியெண்ணி செயலாற்றி
தன்மொழியை உணர்வாக்கி தரணியெங்கும் வலம்வந்தார்
தாய்க்குலத்தின் தவச்செல்வி எங்களம்மா தங்கம்மா

நல்லைநகர் நாவலரை நாமென்றும் இழக்கவில்லை
சொல்லவல்ல நிலையினிலே எங்களம்மா வந்துவிட்டார்
நாவலரின் வழிநடக்க நம்மம்மா துணையானார்
நாளுமே அம்மாவை நாம்போற்றி நின்றிடுவோம்

தன்வழியில் நடப்பதற்கு சரியான பிள்ளைகளை
சன்மார்க்க வழியினிலே பயிற்றுவித்தார் எங்களம்மா
எங்களம்மா தலைப்பிள்ளை ஏற்றபணி ஆற்றுகிறார்
மங்கலமாய் தங்கம்மா மனமெல்லாம் நிறைகின்றார்

(இன்று தங்கம்மா அப்பாக்குட்டியின் குருபூசை தினமாகும்)

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் ... ஆஸ்திரேலியா

# யாழ்.கோப்பாயில் இந்தியர் சிகிச்சை பெறுவது குறித்து அச்சம் வேண்டபாம்

## ஸ்ரீபவானந்தராஜா அறிவிப்பு

யாழ்.கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் அமைக்கப்பட்டிருக்கும் கொரோனா சிகிச்சை நிலையத்தில் வட இந்தியர்கள் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருக்கின்றமை தொடர்பாக எவரும் அச்சமடையத் தேவையில்லை என யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுக்குள்ளான ஒரு தொகுதி இந்தியர்கள் யாழ்.கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

கொழும்பு புறநகர்ப் பகுதி ஒன்றில் கொரோனா தொற்றுடன் இனங்காணப்பட்ட இந்தியர்கள் கோப்பாய் சிகிச்சை நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் இரண்டு வருடத்துக்கு மேலாக இலங்கையில் தங்கியிருந்து தொழில் புரிபவர்கள் எனத் தெரியவந்துள்ளது.




ஆகவே, அங்கு சிகிச்சை பெறும் கொரோனா நோயாளிகள் தொடர்பில் எவரும் அச்சம் கொள்ளத்தேவையில்லை எனத் தெரிவித்தார்.

# மன்னார் தேவன்பிட்டி மக்களுக்கு வருட இறுதிக்குள் வளமான வாழ்வாதாரம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்

## டக்ளஸ் தேவானந்தா உறுதி

மன்னார் தேவன்பிட்டி மக்களுக்கான வளமான வாழ்வாதாரத்தை இந்த வருட இறுதிக்குள் ஏற்படுத்தித் தருவதாக உறுதியளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடலட்டை பண்ணைகளை அமைக்க விரும்புகின்றவர்கள் ஒரு மாத காலத்தினுள் அமைத்துக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

மன்னார், தேவன்பிட்டி கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை கலந்துரையாடலின் போதே, கடற்றொழில் அமைச்சர் மேற்குறித்தவாறு தெரிவித்துள்ளார்.

இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் கருத்துக்களை முன்வைத்த பிரதேச மக்கள், ஏற்றுமதி நோக்கத்திலான நண்டு, கணவாய் போன்ற தொழிலைப் பெருமளவில் மேற்கொண்டு வருகின்றனர் எனவும், அதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றமையால், மாற்றுத் தொழிலுக்கான மீன் வலைகளைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை முன்வைத்தனர்.

அதைவிட, சுமார் 65 பேர் கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதற்கு ஆர்வமாக இருக்கின்றனர் எனவும், அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு தருமாறும் கேட்டுக் கொண்டனர். அதேபோன்று பல்வேறு அடிப்படைத் தேவைகள் தொடர்பான கோரிக்கைகளும் பிரதேச மக்களால் முன்வைக்கப்பட்டது.



இந்நிலையிலேயே, தற்போதைய அரசியல், பொருளாதார சவால்கள்தொடர்பாகஎடுத்துக்கூறிய கடற்றொழில் அமைச்சர், மக்களுக்கான வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித் தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.

அதுவேளை, தேவன்பிட்டி கிராமத்தில் சுமார் 52 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில், அவர்களுக்கான வாழ்வாதாரம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்த மாதர் அமைப்பின் பிரதிநிதிகள், ஏனைய குடும்ப பெண்களும் பொருளாதார நன்மைகளை பெற்றுக்கொள்ளும் வகையில் குறித்த திட்டம் அமைய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எரிவாயுவின் விலை அதிகரிப்பு எந்தத் தீர்மானமும் இல்லை



சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்க எந்த தீர்மானமும் எட்டப்படவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த முடிவை அமைச்சரவை உப குழு எடுத்துள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்று (திங்கட்கிழமை) தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்குமாறு நிறுவனங்கள் கோரிக்கை முன்வைத்திருந்தன.

இதனை அடுத்து விலையை அதிகரிப்பது தொடர்பாக ஆராய அமைச்சரவை உப குழு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது

# ஹெரோயினுடன் இருவர் கைது

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுண்டிக்குளம் பகுதியில் 60 கிராம் ஹெரோயினுடன் இருவரை தர்மபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தர்மபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து மேற்படி இரண்டு சந்தேக நபர்கள் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியமையை அடுத்து அவர்கள் இருவரையும் பொலிஸார் சோதனையிட்ட பொழுது 60 கிராம் ஹெரோயின் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்டது.

அத்தோடு அவர்கள் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்களுடன் சந்தேக நபர் இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமைகளில் வரும் வரி விளம்பரத்தினை மிகக் குறைந்த விலையில் பிரசுரித்து பயன்பெறுங்கள்.
கட்டணவிவரம்
பெட்டி விளம்பரம் :- 300
வரி விளம்பரம் :- 200
8X8 :- 500
தொடர்புகளுக்கு :- 076 443 8618

# வடக்குக் கிழக்கு மக்கள் அரசிடம் கையேந்தக்கூடாது

## செல்வம் எம்.பி. வலியுறுத்து



நாட்டில் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை அரசு உரிய முறையில் வழங்காது பாதிக்கப்பட்ட மக்களை ஏமாற்றி வருவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குற்றம் சுமத்தினார்.



மன்னார் ரெலோ அலுவலகத்தில் நடைபெற்ற உலர் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பிரித்தானியாவில் வாழ்கின்ற நண்பர் யோகன் விஸ்வநாதனால் வன்னி மாவட்டத்தில் 5 ஆயிரம் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். குறித்த உலர் உணவுப் பொதிகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னாரில் உள்ள ரெலோ அலுவலகத்தில் இடம் பெற்றது.

கொவிட் தொற்று காரணமாக நாட்டில் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் பாதிக்கப்பட்டுள்ள ஏழை மக்களுக்கு அரசாங்கம் 5 ஆயிரம் ரூபா வழங்குவதாகவும், உலர் உணவுப் பொருள்களை வழங்குவதாகவும் கூறி ஏமாற்றுகின்ற நிலையில் வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற மக்கள் இலங்கை அரசாங்கத்திடம் கையேந்தக் கூடாது என்பதற்காக புலம் பெயர்ந்த உறவுகள் பாரிய உதவிகளைச் செய்து வருகின்றனர்.

அதே போல் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) சார்பாக பிரித்தானியாவில் வாழ்கின்ற நண்பர் யோகன் விஸ்வநாதனிடம் கோரிக்கை விடுத்த நிலையில் வன்னி மாவட்டத்தில் 5 ஆயிரம் குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்க நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டுள்ளார்.

அதன் ஆரம்பப் பணிகளை ஆரம்பித்துள்ளோம். அவருக்கு நாங்கள் நன்றி கூற வேண்டும். பாரிய நிதி உதவியை வழங்கி ஏழை மக்களினுடைய பசியைப் போக்க ஒரு தர்மத்தை செய்துள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கம் சார்பாகவும் வன்னி மாவட்ட மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு குறித்த உலர் உணவுப் பொதிகள் வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எமது மக்கள் அரசிடம் கையேந்தும் நிலையை மாற்ற புலம் பெயர்ந்த உறவுகள் எம் மக்களுக்கு கை கொடுக்க வேண்டும். நாட்டில் பயணத்தடை ஏற்பட்டுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சமுர்த்தி பெற்றுக் கொள்ளும் குடும்பங்களுக்கும் 5 ஆயிரம் ரூபா வழங்குவதாகத் தெரிவித்திருந்தனர். ஆனால் சமுர்த்தி பெற்றுக் கொள்ளுகின்றவர்களுக்கு மாத்திரமே குறித்த 5 ஆயிரம் ரூபா கிடைக்கப்பெற்றுள்ளது. ஏனைய பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை.

அந்த வகையில் அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களை ஏமாற்றியுள்ளது. அன்றாட கூலித் தொழிலை மேற்கொள்ளுகின்றவர்களின் குடும்பங்கள் பல்வேறு துயரங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இந்த நிலையிலே அனைத்துக் கட்சிகளும் இணைந்து புலம் பெயர் மக்களின் உதவிகளுடன் நிவாரண உதவியை வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். அரசாங்கம் தவறான கருத்துக்களைக் கூறி மக்களை ஏமாற்ற வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார்.




## பயணத்தடை பாதித்த குடும்பங்களுக்கு மன்னாரில் உலருணவுப் பொருள்கள்





மன்னாரில் பயணத் தடையினால் பாதிக்கப்பட்ட 150 குடும்பங்களுக்கு, உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

'மன்னாரின் அபிவிருத்திக்கான பயணம்' அமைப்பினால், வறுமைக்கோட்டிலுள்ள 150 குடும்பங்களுக்கு, கடந்த சனிக்கிழமை இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

குறிப்பாகப் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட குடும்பங்கள் உள்ளிட்ட வறுமைக்கோட்டிலுள்ள குடும்பங்களுக்கே இவ்வாறு உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மருதமடு, மூன்றாம் பிட்டி, பரப்பாங்கண்டல், சாந்திபுரம், செல்வநகர், அந்தோனியார் புரம், தேவன் பிட்டி ஆகிய கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கே இவ்வாறு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தென்னை மரங்களை வெட்டுவதற்குத் தடை

### விசேட வர்த்தமானி வெளியீடு

பிரதேச செயலாளர்களின் அனுமதியின்றி தென்னை மரங்களை வெட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயால் இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், தென்னை மரமொன்றை வெட்டுவதற்கான அவசியம் இருப்பின் அது தொடர்பாகப் பிரதேச செயலாளரின் அனுமதியைப் பெறுவது அவசியமாகும்.

## வெளிநாடுகளிருந்து இறக்குமதி செய்யப்படும் செல்லப் பிராணிகளை தனிமைப்படுத்த முடிவு

விலங்குகள் மூலம் மனிதர்களுக்கு கொவிட் வைரஸ் பரவுவதாக இதுவரை எந்தவொரு சம்பவங்களும் இடம்பெறாவிட்டாலும், நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் செல்லப் பிராணிகளைத் தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை கால்நடை வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் விளைவாகப் பொதுமக்கள் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் அண்மையில் சிங்கம் ஒன்றுக்கு கொவிட் வைரஸ் தொற்று கண்டறியப்பட்டதையடுத்து விலங்குகளுக்கும் கொவிட் வைரஸ் தொற்றுமா என்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

இந்தநிலையில், இலங்கை கால்நடை வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் எரந்திக குணவர்தன இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோது -

தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் பணிபுரிகின்ற ஊழியர் ஒருவரிடமிருந்துதான் சிங்கத்துக்குக் கொவிட் வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது என்று கூறினார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மகளின் திருமணத்தை பிரமாண்டமாக நடத்தவே ஹெரோயின் கடத்தினேன்!

## கைதான சப் இன்ஸ்பெக்டர் சாட்சியம்

மகளின் திருமணத்தை ஐந்து நட்சத்திரக் ஹோட்டலொன்றில் பிரமாண்டமாக நடத்துவதற்கான நிதியைத் திரட்டுவதற்காகவே போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டேன்.

-இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சப் இன்ஸ்பெக்டர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் சீருடையில் சுமார் 50 கோடி ரூபா பெறுமதியான 52 கிலோ ஹெரோயின் கடத்திய களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தின் உப பொலிஸ் பரிசோத கரே, பொலிஸ் விசாரணையின் போது இவ்வாறு தெரிவித்துள்ளார் என செய்தி வெளியாகியுள்ளது.

கைதாவதற்கு முன்னர்கூட இவர் 75 கிலோ ஹெரோயின் கடத்தியுள்ளார் எனவும், அதற்காக 20 இலட்சம் ரூபா பெற்றுள்ளார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஹெரோயின் கடத்திய உப பொலிஸ் அதிகாரியுடன் கடத்தப்பட்ட ஹெரோயினைப் பெறுவதற்காகக் காத்திருந்த இருவரும் அண்மையில் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

போதைப்பொருளுடன் பயணித்த இரண்டு வாகனங்களும் கைப்பற்றப்பட்டிருந்தன.



குறித்த பொலிஸ் அதிகாரி பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முகத்துவாரத்தில் மீனவர் போராட்டம்

கொழும்பு முகத்துவாரம் பகுதியில் திங்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தை தொடர்ந்து மீன்பிடிக்க முடியாமல் நாளாந்தம் இன்னல்களை அனுபவிக்கின்றோம் எனத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களை பொலிஸார் தாக்கிய காணொலிகள் வெளியாகின எனவும் கூறப்படுகின்றது. மேலும் மீன்பிடி நடவடிக்கை தடை செய்யப்பட்ட நிலையில் தமக்கு இதுவரை இழப்பீடு வழங்கப்படவில்லை என்றும் அரசாங்கம் அறிவித்துள்ள 5,000 ரூபா தமக்கு போதாது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# 174 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது!



(ந.லோகதயாளன்)

யாழ்., வடமராட்சி, தொண்டமானாறு கடற்பரப்பில் முன்னெடுக்கப்பட்ட சுற்றுக்காவல் நடவடிக்கையில் கஞ்சா போதைப்பொருள் கடத்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றுகடற்படையினர்தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 174 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள்வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் கடற்படையினரால் முற்படுத்தப்பட்டுள்ளனர். கஞ்சா போதைப்பொருளும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவின் 'டெல்டா' தொற்றுடன் மாதிவெலவில் ஒருவர் அடையாளம்

மாதிவல - பிரகதிபுர பகுதியில் 'டெல்டா' வைரஸினால் பாதிக்கப் பட்ட ஒருவர் அடையாளம் காணப் பட்டுள்ளார் என்ற சந்தேகம் எழுந்துள்ளதைத் தொடர்ந்து அதிகாரிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளனர் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

'டெல்டா' வைரஸுடன் நோயாளி அடையாளம் காணப்பட்டுள்ளார் என்பதற்கான ஆரம்பகட்ட அறிகுறிகளே தென்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

இதன்படி, 'டெல்டா' வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளார் எனச் சந்தேகிக்கப்படுகின்ற தொற்றாளரின் மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், குறித்த பகுதியில் கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கொழும்பு, தெமட்டகொடை ஆராமய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கமைய, அதிக வீரியம் கொண்ட 'டெல்டா' கொரோனா திரிவுடன் கூடிய 5 பேர் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இதையடுத்து, அப் பிரதேசத்தை தனிமைப்படுத்தி, குறித்த தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள் உள்ளிட்ட நபர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், சுகாதார அமைச்சரின் அறிவுறுத்தலுக்கமைய, நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் வீரியம் மிக்க 'டெல்டா' திரிவு பரவியுள்ளதா எனக் கண்டறிய விசேட பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மதுபான நிலையத்துக்கு முன்னால் ஒருவர் கைது

## அதிக மதுபானப் போத்தல்களை வாங்கினாராம்



(இ.கலையமுதன்)

அதிகமான மதுபானப் போத்தல்களைக் கொள்வனவு செய்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் மதுபான நிலையத்துக்கு முன்பாகவே யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்ட பயணத் தடை சுமார் ஒரு மாதத்தின் பின்னர் திங்கள் அதிகாலை தளர்த்தப்பட்டது.

அதேவேளை, மதுபான நிலையங்களுக்கு முன்பாகக் கூட்டம் கூடும் என்பதால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இந்தநிலையில், நபர் ஒருவர் கொள்வனவு செய்து எடுத்துச் செல்லும் அளவுக்கு அதிகமாக மதுபானப் போத்தல்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் திங்கள் ஒருவர் யாழ். பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

# டிப்பர் வாகனம் மீது படையினர் சூடு; ஒருவர் வைத்தியசாலையில் சேர்ப்பு

## கிளிநொச்சியில் திங்கள் சம்பவம்



கிளிநொச்சியில் இராணுவத்தினரின் கட்டளையை மீறிப் பயணித்த டிப்பர்வாகனம்மீதுமேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி நாகேந்திரபுரம் பகுதியில் திங்கள் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதில் சாரதியின் உதவியாளர் காயமடைந்த நிலையில் தர்மபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

நாகேந்திரபுரம் பகுதியில் உள்ள இராணுவச் சோதனை சாவடி ஊடாக மணல் ஏற்றிக்கொண்டு பயணித்த டிப்பர் வாகனத்தை சோதனை நடவடிக்கைக்காக மறித்தபோது வாகனம் நிற்காது பயணித்தமையால் தாம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.


# மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.


# 3ஆம் அலையில் 1,972 பேர் மரணம்

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலையால் கடந்த ஏப்ரல் 15ஆம் திகதி முதல் இதுவரை 1,972 பேர் பலியாகியுள்ளனர்.

கொரோனாத் தடுப்புச் செயற்பாட்டு மையம் இன்று காலை வெளியிட்டிருந்த தரவுகளில் மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனாவின் முதலாவது அலையில் 13 மரணங்களும், இரண்டாவது அலையில் 596 மரணங்களும் பதிவாகின.

அதேவேளை, கொரோனாவால் நாட்டில் பலியானவர்களின் எண்ணிக்கை 2,581 ஆக அதிகரித்துள்ளது.